[illegible]

V. 6, NO. 42 26 Oct 1933

JL
ஹ2ll, N28KN
N33.6.42
189166

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹூ அக்டோபர் மீ 26௳ [No. 42

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1934
MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 757
2. அப்பர் (64 கலை-வியாகரணம் - கலிச்சந்தம்) E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 759
3. தமிழ்ப் பாடம் அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 760
4. மானத சாத்திரம்—உன்னிப்பும் அக்கரையும். வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L., 763
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 1-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 765
6. யாப்பிலக்கணம்—வகையுளியும், வனப்பும் வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 766
7. கலித்தொகை (பாலைக்கலி, 31) T. A. கனகசபாபதி முதலியார் 768
8. காற்றுமழை (அங்கம் 5. களம் 1.) Shakespeare's Tempest 769
9. கம்பராமாயணம் (அயோமுகிப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 770
10. வர்த்தமானம் 772

கலாநிலயம்

189166

கற்பனையும் காட்சியும்.

கற்சுவரும் ஒன்றைக் காண்கின்றது, கண்ணாடியும் காண்கின்றது; எனினும் தான் கண்டதைப் பிறருக்குக் காட்டவல்ல நலத்தது கண்ணாடியே. இவ்வகையிற் கண்ணாடி போன்றதாம் கவிதை. இயற்கைக்கெதிரே கண்ணாடி பிடிப்பவனே கலைஞன் என்றார் ஷேக்ஸ்ப்பியர். எனினும், கண்ணாடி செய்வதையெல்லாம் கலைஞன் செய்யவல்லவனாகை, கலைஞன் செய்வதையெல்லாம் கண்ணாடியாற் செய்யவோ இயலாது. கண்ணாடி பொருளின் உருவத்தையும் நிறத்தையுங் காட்டும்; கலைஞன் அப்பொருள்களின் இதயத்திலுள்ள மெய்ம்மையின் ஒற்றுமையையுங் காட்டுவான். காட்டுவதுமன்றி அதனை நாம்காணுமாறு தன்னுடைய கண்களையும் நமக்கு நல்கிவைக்குமொரு பேருதவியும் செய்பவன் அவன். கண்ணைக் கெடுத்தபின் மதியைக் கொடுக்குமென்பார் சிலகடவுள். கண்ணைக் கொடுத்து மதியையுங் கொடுக்கின்ற வண்மையால் தெய்வத்தினும் சாலப் பெரியவர் கலைஞர்.

பொருளின் உருவ மனைய வெளித்தோற்றங்களை மாத்திரமன்றி உண்ணின்ற உண்மையையுங் கவிஞர் தம் கவிதையால் காட்டப் புகுவதால்தான், அன்னவர் தம் கண்வழி காணப்பயிலாத மக்கள், கவிதையை வெறும் பொய்ம்மையோடு கலந்து மயங்கி அதன் நலத்தினை நண்ணமாட்டாத அயலார்களாகத் தம்மை ஆக்கிக்கொள்கின்றனர். கவிதையெல்லாம் கற்பனையே என்பதும், கவிஞர் பொய்யாய வேறோர் உலகத்தைப் படைக்கின்றனர் என்பதும் உண்மையை உணர்ந்துரைக்கும் வாசகங்கள் ஆகமாட்டா. கவிஞர் கொடுக்கும் கண்களை ஏற்காமல் அவர்காட்டும் உலகத்தைக் காணப் புகுவார் கலக்கமே அது. கவிதை என்பது கற்பனையன்று, இல்லாததை இயலாததை இருக்கமாட்டாததைப் படைப்பதன்று. என்றென்றும் உண்ணின்ற மெய்ம்மையைக் காட்சிகொண்ட நிலைமையே கவிதை. இத் தோற்ற உலகத்தினூடு, அதன் வெளித்தோற்றத்தில் தென்படாததோர் மெய்ம்மையை ஐயமறக் காண்கின்றான் கவிஞன். உண்மையின் நன்மையின் அழகின் ஓர் உருவம் அல்லது ஓர் கருத்து அவனது உள்ளத்தில் திரண்டெழுகின்றது. இக் கருத்திற்றான் நிகிலச் செய்திகளை ஊடுருவிப் பிணைக்கும் ஒற்றுமையைக் காணல் வேண்டும். இதனாற்றான் தெய்வமாக்கவிகள் நம்மை உய்விக்கின்றனர். திப்பியத் தூய்மையால் தலைசிறந்தது எது என்னுங் கேள்விக்கு, ஜர்மன் வித்தகர் கீதே என்பவர், "இப்பொழுதும் எப்பொழுதும் உன்னியுன்னி யுணரவுணர உண்ணின்ற ஒற்றுமையுடன் எது இணைத்து வைக்கின்றதோ அதுவே, திப்பியத் தூய்மையால் தலைசிறந்தது" என்கின்றார்.

ஒற்றுமை உணர்வினால் விளைவது அமைதி; கவிதையானது நமக்கு அளிக்கின்ற நன்கொடைகளில் மிகச் சிறந்தது இவ்வமைதியாம். அழகியவோர் கவியைப் படித்து நாம் சிந்திக்கின்றபோது நாம் இன்பமடைகின்றோம் என்பது மாத்திரமன்றி, புலனறிவிற்கும் பகுத்தறியும் புத்திக்கும் மேலாயவொரு காட்சியைக் கண்டு நம் மனமானது உயர்த்தப் பெறுகின்றது. கைகேசியின் சூழ்ச்சியிலகப்பட்டுத் தயரதன் மயங்கிக் கிடக்கின்றானாயினும் இராமனுக்கு முடிபுனைதற் கென்றமைந்த அந்நாட் காலையில்,

மூவ ராய்முத லாகிமூலம தாகி
ஞாலமு மாகியத்
தேவ தேவர் பிடித்த போர்வி லுடைத்த
சேவகன் சேணிலங்
காவன் மாமுடி சூடு பேரெழில் காண
லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்னமலர்ந்த
பங்கய ராசியே.

என்பதனை ஓதுங்கால் மனத்தின்கண் அமையும் ஓர் அமைதியை வேறெங்கு எவ்விலை கொடுத்துத்தான் வாங்கக் கூடும். பெருங்காவியம் என்று இருப்பவைகளை யெல்லாம் அமைதியொன்று தழுவித் தூங்குகின்றது. புத்தியினளவைக்கொண்டு பெருங்காவியங்களை ஆராய்ந்து அதன் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் வெறுங் கற்பனையே என்று கழித்துவிடுவதிற் பயனில்லை. ஒரு காவியத்தின்கண் நிகழும் பாத்திரங்களும் காரியங்களும் ஒருபோதும் இருந்திராதவர்களும் நிகழ்ந்திராதவைகளும் ஆகலாம். எனினும், இருக்கின்றவைகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவோர் பொருளும் பயனும் காவியங்களுக்குண்டு. காவியத்தினுள் நிகழ்கின்ற பாத்திரங்கள், ப்ராஸ்ப்பீரோ இயம்பிய வண்ணம், "கனவுகளைச் செய்கின்ற அப் பொருளினால்" ஆகலாம். இருப்பினும் என்! நாம் மெய்ம்மையை உணர்வதற்கு அவர்தாம் பெரிது உதவுகின்றனர். இக் காவிய உருவங்கள், நம் வாழ்க்கையின் தன்மையை வெளிப்படுத்துகின்றன. மானுட வாழ்க்கையின் பிரதிபிம்பங்களே காவியங்கள் என்று கூறுவது வழக்கமாயிருக்கின்றதாயினும், அவ்வாறு கருதுவது நேரன்று, ஆழ்ந்த நினைவும் அன்று. மனிதர் வாழ்கின்ற வாழ்க்கையின் வகையே நிச்சயமென்றும் அதனைத் தழுவி அவ்வாழ்க்கையின் வண்ணத்தைக் காட்டுவதிற்றானே காவியங்களின் சிறப்பு அமைந்திருக்கின்றதென்றும் பேசுவார் கவிதையின் மெய்த்திறம் அறியாதார் சிலர். இது கவிதையன்று, பேதைமை. கலங்கலில் காட்சிப் புலமையோர் தம் கவிதாசக்தியால் பாடியிருக்கின்ற காவியங்களிற்கண்ட பொருள்கள்தாம் நிச்சயம்; நம்முடைய வாழ்க்கை அக்காவியங்களின் நிழல் ஆகக்கூடுமாயின், பாக்கியம் பெரிதுடையோம் என மதித்தல் வேண்டும்.

கலைஞனின் கருமம் மிகவும் நுட்பமானது. நம் வாழ்க்கைக்கு ஒருநோக்கமும் குறிப்பும் உண்டென்னும் உணர்வைத் தூண்டுவதே கவிதையின் தொழில். பயிலப்பயிலப் பாசுரங்களினின்று சுரக்கும் இன்பமானது அவ்வுணர்வு பெருகுமாறு நம் மனத்தைப் பண்செய் களிக்கின்றது. அவ்வகைப் பண்பட்டவோர் மனம் நோக்கமில்லா வாழ்க்கையை நெடிது நடத்த இசைந்திடாது. தன்னைவிற்றுத்தின்னும்வழி யென்னவென்று வேறுவேறு பேர்களால் ஆராய்ந்து தீர்கின்ற இது, நோக்கமுடைய வாழ்க்கையன்று. ஒரு நோக்கம் நிறைவேறுவதற்காக வாழ்கின்றவாழ்க்கை மெய் வாழ்க்கை யாகுமன்றி, உயிர் வைத்திருப்பதற்குரிய வழிகளைத் தேடுவதே இடைவிடாக் கருமமும் கருத்துமாயின் அது நோக்கமுடைய வாழ்க்கையன்று. நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபட்டு ஒருவன் வயிறு பிழைக்கவேண்டுமென்று எண்ணுகின்றான்; மற்றவன், பிறர் இரத்தத்தைச் சிந்தித் தன் வயிறு பிழைக்கவேண்டுமென் றெண்ணுகின்றான். பொதுசனங்கள் அவ்வுழைப்பாளியைப் பாராட்டுவார், இக் கொலையாளியை இகழ்வார்; சட்டம் இவனைத் தண்டிக்கும் அதனைத்தண்டிக்காது. இவ்வளவே இவ்விருவருக்கும் வேற்றுமை; இதன்மேலில்லை. பின்னவன் தொடர்கின்ற வழியிற் பிழையுளதேயொழிய, வயிறு பிழைப்பதன்றி வேறோர் நோக்கம் வாழ்க்கையில் இல்லாமையில் இவ்விருவரும் ஒக்கின்றார். இதனோடு, தன் பேரைச் சிலர் பலர் பேசவேண்டும் என்னும் ஆசையோடு உலகமக்களின் வாழ்க்கையின் நோக்கமெல்லாம் முடிகின்றது. எஞ்சுவதென்ன? ஏங்கிய சிந்தையே எம்மருங்குங் காணலாம். இந்நிலையில் மக்களுக்குக் கைதந் துதவவல்ல புண்ணியத்தது கவிதை. வாழ்க்கையின் நோக்கமில்லாமையே பாழ்மை அனைத்திற்குங் காரணம். வீடுதோறும், தெருதோறும் ஊர்தோறும் உலகமடங்கலும் புலிகிடந்ததூறுகி அடர்வதோ கடன்! இதனின்று, வாழ்க்கைக்கோர் கருத்தும் நோக்கமும் நேரும்வண்ணம் தூண்டும் வகையால் மானுட இனத்தை மெய்ம்மையோடு உறவு கொள்ளச்செய்து உயர்த்திக் காக்கும் வண்மையோர் கவிஞரே ஆவார்.

நன்று, அக் கவிஞர்தாம் வாழ்க்கையின்கண் என்ன நோக்கத்தைத் தூண்டித் தருகின்றார் என்ற கேள்வி இச்செவ்வியில் எழுவது இயற்கையே. இன்னதற்கு இயம்பும் விடை விந்தை மிக விளைவிப்பதற் குரியதாம். குறித்த நோக்கம் இதுவென்று சுட்டிக்காட்ட இயன்றபடி ஒன்றும் இல்லாமலே, பொதுவாக வாழ்க்கையானது குறிப்புடைய சிறப்பு வாய்ந்தது என்னும் உணர்வைக் கவிதை தூண்டித் தருதலிற்றானே அதன் திப்பிய மேன்மையும் பெருமையும் அடங்கியிருக்கின்றன. ஜர்மன் வித்தகர் இம்மானுயல் காண்ட் என்பவர்,

"Art gives us the form of purposiveness in general without the representation of any special purpose"

என்று இதனையே இணையிலா அழகுடன் எடுத்துக் காட்டினர். தனித்தனி நிகழ்ச்சிகளின் தன்மையையும் நியதியையும் வகுத்துரைப்பது கலையின் தொழிலன்று. இப்பிறப்பு ஒருபொருளுடையது என்பதை மட்டுமே நாம் உணரும்படி செய்கின்றது அது. இதனால், இப்பிரபஞ்சத்தினழகு நீதி தயை முதலியவைகளைப்பற்றிய மெய்க்கருத்துக்கள் நம்அகத்துளே பெருமையுறப் பெருகுகின்றன. அதன்மேல் விளைவன அனைத்தும் நன்மையின் கதிர்களே. பிறப்பிற்கொரு பொருள் உண்டென்பதை உணர்ந்தபின் அப்பொருள் யாதெனத் தேடி எய்துவதின்றியே நம்மனம் அமைதல் இயலாது. இப்படித் தருவிவருகையில் அன்பினது மென்மை தென்பட்டதும், "அன்பு மறனு முடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்று ஒகையோடு விளம்பி நமது மனம் இன்புறத் தழுவிக்கொள்கின்றது. "அன்புகூர்வாய், பின் நீ எது வேண்டுமாயினும் செய்" என்ற முடிவே பிறப்பின் பயனும் வாழ்க்கையின் நோக்கமும் ஆகின்றது. இது கவிகளின் கற்பனையால் விளைவதுபோல் தோன்றினும், பிரபஞ்ச மெய்ம்மையின் காட்சியேயன்றி வேறன்று. இதனைக் கவிதையினின்று பெற விரும்புவோர், அதன்பால் ஒரு நம்பிக்கையைக் கையுறையாகக் கொண்டு செல்லவேண்டும். அக் கையுறையைக் கட்டித்தர முயல்கின்றது கலாநிலயம்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[747-வது பக்கத் தொடர்ச்சி]

III. சந்த விருத்தங்கள் வகை

(1) கலிச்சந்தம்—சந்தக்கலி

தமிழில் நாற்சீர் விருத்தங்களிற் சந்தமுள்ளவைகளைச் சந்தக்கலிவிருத்த மென்றும், கலிச்சந்த விருத்தமென்றும் நமது முன்னோர்கள் பேதப்படுத்துவதுமுண்டு. நாம் அவ்வாறு பேதப்படுத்துவது அவசியமில்லை. இரண்டையும் ஒரு வகையாகவே கொள்ளலாம். எனவே, கலிச்சந்த விருத்தங்கள் அல்லது சந்தக்கலி விருத்தங்கள் தமிழிலக்கியத்தில் இருபத்தைந்து வகையே உள. அவை பின்வருமாறு:—

மனோரமா

முதல் மூன்று எழுத்துக்களும் குற்றெழுத்தாய், அதற்குப் பின்னர் நெடிலுங் குறிலும் மாறிமாறித் தங்குமானால், அதை மனோரமா வென்று கூறுவார். இச் சந்தவிருத்தத்தில், முதல் மூன்று சீர்களும் மும்மாத்திரைச் சீர்களாயும், ஐந்து மாத்திரையுள்ள கூவிளச்சீர் நான்காஞ்சீராயும் வரும்:—

முதலெ ழுத்து மூன்று குற்றுயிர்
மதியி ரண்டு மாறி மாறியே
வதியு மேன்ம னோர மாவென
வுதவி னுரு வப்ப நாமமே.

[குறிப்பு:—இதில் முதல்சீர் புளிமாச்சீராயிருப்பது அவசியம்]

இதில் மற்றொருவகை சாதாரணம் - அது முதல் மூன்று சீர்களும் மூன்று மாத்திரையளவும் ஐந்தாவது சீர் ஐந்து மாத்திரையளவும்பெறுவது. இவ்விதச் செய்யுள்களில் நான்கு பாதங்களும் மாத்திரையளவால் ஒத்துச் சீரளவாலும் எழுத்தளவாலும் பேதப்படுவதால், இவை தமிழுக்கே உரியனவென்பர் விருத்தப்பாவியல் ஆசிரியர் (உ - ம்)

வாம தேவ னென்னு மாமுனி
காம ரன்னை கருவின் வைகுநாட்
பேமு றுக்கும் பிறவி யஞ்சினு
னேமு றுமை யிதுகி லைக்குமால்.
வன்பு பூண்ட மனவ கப்படா
வென்பு பூண்ட விறைவ(ர்) தம்மடிக்
கன்பு பூண்ட வறிவின் மேலவர்
துன்பு பூண்ட தொடர்பு நீக்குவார்.

—காஞ்சிபுராணம்.

வெண்டளைகலந்த நான்மாத்திரைச்சீர்ச் சந்தக்கலி விருத்தங்கள்:—இதற்குத் தகுந்த உதாரணம் அப்பர் விடந்தீர்த்த திருப்பதிகம்.

ஒன்றுகொ லாமவர் சிந்தையு யர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவ(ர்)
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.
இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே.

நான்கு மாத்திரைத் தேமா புளிமா கலந்த சந்தக்கலி

(உ-ம்) நீரும் மலருந் நிலவுஞ் சடைமே
லூரும் மரவம் முடையா னிடமாம்
வாரும் மருவி மணிபொன் கொழித்துச்
சேருந் நரையூர் சித்தீச் சரமே.

—நம்பியாரூரர்.

மற்றும் சம்பந்தர் திருநாகேச்சரம் - பண் - இந்தளம்-பதிகத்தை நோக்குக.

நான்கு மாத்திரைப் புளிமாச்சீர் நான்கு புணரப் பாதத்தில் நெட்டெழுத்து வருவது.

இது சம்பந்தர் பதிகங்களில் காணலாம். ஆயினும் சிறிது மாறுபடும். திருவானைக்கா - பண் - இந்தளம் பதிகம் காண்க. மற்றும்,

சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் றனையா ருயிர்வவ் வியகாலன்
கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டத்
தேலங் கமழ்புன் சடையெந் தைபிரானே.

திருக்குரங்கணின் முட்டம் - பண்-தக்கராகம்

என்பது இவ்வகையே. இதற்கு உதாரணம்

வடிவே லதிகன் படைமா ளவரைக்
கடிசூ ழரணக் கணவாய் நிரவிக்
கொடிமா மதினீ டுகுறும் பொறையூர்
முடிநே ரியனர் படைமுற் றியதே.

—பெரியபுராணம்-புகழ்ச்சோழர் புராணம். 27

தோதகம்:—இது, நான்கு மாத்திரைச் சீர்களான மூன்று கூவிளமும் ஒரு தேமாவும் பெற்றுவரும். (உ - ம்)

எண்ணியி ருந்துகி டந்துந டந்தும்
அண்ணலெ னுநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னுருறை பூவண மீதோ

—வன்றொண்டர்.

சம்பகமாலாச் சந்த விருத்தம்:—

சம்பக மாலாச் சந்த விருத்தத்
தம்பத மெட்டேழ் தானமி ரண்டில்
அம்புவி யாய்குற் றுவியு மூன்றில்
வம்பவிழ் கோதாய் வந்தன மாதோ.

வித்யுன் மாலைச் சந்த விருத்தம்:—

அடிமுழுவதும் நீண்ட தேமாச்சீரே வருவது.

(உ-ம்) வீயா வாமா மாவா யாவீ
யாவா யாரா ராயா வாயா
வாயா டேமோ மாடே யாவா
மாரா மாதோ தோமா ராமா.

மணிரங்கச் சந்த விருத்தம்;—

குறிலீற்றுத்தேமாச் சீரொன்றும், கூவிளச்சீரிரண்டும், மாச்சீர் ஒன்றுமாய் வருவது இதன் சூத்திரம்.

வாழி யென்னுமு தாரண மாச்சீர்
சூழு மோரிரு கூவிளே தூய்மா
வாழி வையம றைமணி ரங்கப்
பாழி யங்கவி யைந்தொடி மாதே.
—விருத்தப்பாவியல்.

(உ-ம்) சம்பந்தர் பாடிய திருக்கழிப்பாலை - பண்-கௌசிகம்—இதில் அந்தத்தில் ஒரு நெடில் அதிகரிக்கும்.

சுத்த விராட்டு

நான்கு, ஒன்பது, ஐந்து, ஏழு இவ்விடங்களில் குற்றுயிரும் மற்ற விடங்களில் நெட்டெழுத்துமாகிய இவைகளால் முடியுமென்பர் விருத்தப் பாவியலார். அதற்கு உதாரணமும் சூத்திரமுமாக:—

நாலோ டொன்பது நாலு மொன்றுமேழ்
பாலே குற்றுயிர் பாங்கர் நீடெழுத்
தாலே முற்றிடு மாகி னைமமு
மெலாஞ் சுத்த விராட்டு மேவுமால்

என்றார்.

வனமயூரம்

ஒரு நெடிலும் முக்குறிலுமாலாகிய மூன்று காய்ச்சீர்களாலும் ஒரு நெடிலும் ஒரு குறிலும் சேர்ந்த தேமாச் சீரொன்றாலும் ஆக்கப்பட்டது. (உ - ம்)

கந்தமா வுந்துபுகை யுந்தலில்வி ளக்கேர்
இந்திரனு ணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தமலி யுந்தருமி டைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்டிருவை யாறே
சம்பந்தர்

நவநந்தி

மேற்கூறியவுதாரணத்தின்கண்முதற்சீர் கூவிளங்காயாய் வருவதற்குப் பதிலாய்க் கருவிளங்காய்ச்சீர் வருமாயின் அது நவநந்தி என்றழைக்கப்படும். இதில் 4-ம் சீர் நீண்ட தேமாவாய் நிற்கும். இதன் சூத்திரம்

நுவணந்த னிற்பெரிய நுண்மறைக ளேபோல்
புவனந்த னிற்பெரிய பொன்னிமய மேபோற்
சிவனுந் தனித்தகைய தேவமொழி வல்லோர்
நவநந்தி நீயெனந வின்றபெயர் நாடே

இதற்கு உதாரணம்:—

விளங்கிழைம டந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொளவி ருத்தியவொ ருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள் ளாறே
சம்பந்தர்.

இவ்வகையில் ஒரு நெடிலை அந்தத்திற் சேர்ப்போமாயின் திருநாவுக்கரசின் திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரமாம்.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே
அப்பர்.

இதை விருத்தப்பாவிய லாசிரியர் தமிழிற்கே வுரியதெனக் குறிப்பிடுகின்றார்.

முந்தோர்கு றிற்கடைமு டிந்தூறு மாங்காய்
பிந்தோரி டத்தொருவி ளங்காய்பி றங்க
முந்தோரி டத்தினது மூன்றுவ தாக
வந்தால தைத்தமிழ் வலாராத ரிப்பார்.

என்றனர். எனவே வனமயூரம், நவநந்தி யென்னும் இருவகைச் சந்த விருத்தங்களினின்று பல்வகைக் கலிச்சந்த விருத்தங்கள் உண்டான பெற்றியை ஆங்காங்கு நமது தமிழிலக்கியத்தில் காணலாம்.

தமிழ்ப்பாடம் 92.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி

[744-வது பக்கத் தொடர்ச்சி]

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந்
தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பநிற் பீர்புடை
தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன்
சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந்
தலைக்கொண்மினே.

பதப்பிரிவு:—தாளம்தனம் தத்தை சொல்லியரால் வரும் தாழ் மல பாதாளத்து அனத்தத்தை தப்ப நிற்பீர் புடை தங்கிய வேதாளத்தன் அ தத்தை தீர்த்தான் அரங்கன் சகடு உதைத்த தாள் அத்தன் அத்தத்து ஐ ஆயுதன் பாதம் தலை கொண்மின் ஏ.

பதவுரை.

தாளம்-கைத்தாளத்தின் உருவம்போன்ற, தனம்-முலைகளையும், தத்தை-கிளிபோன்ற, சொல்லியரால்-மொழிகளையும் உடைய மாதர்கள் பால்உள்ளமோகத்தால், வரும்-உண்டாகும், தாழ்-ஆழமான, மல-மலம் நிறைந்த, பாதாளத்து-நரகத்தினுடைய, அனத்தத்தை-ஆபத்திலிருந்து, தப்ப-தப்பித்துக்கொள்ள, நிற்பீர்-வேண்டி நிற்கின்றவர்களே! புடை-பக்கத்தில், தங்கிய-தங்கியிருக்கின்ற, வேதாளத்தன்-பூதகணங்களையுடைய சிவபிரானது, அ-எல்லோரும் அறிந்த அந்த, தத்தை-ஆபத்தை, தீர்த்தான்-விலக்கினவனும்; சகடு-சகடாசுரனை, உதைத்த-உதைத்த, தாள்-பாதங்களையுடைய, அத்தன்-எமது தலைவனும்; அத்தத்து—தனது கைகளில், ஐ-ஐந்து, ஆயுதன்-ஆயுதங்களையுடையவனும் ஆன, அரங்கன்-ஸ்ரீரங்கநாதனது, பாதம்-பாதங்களை, தலைக்கொண்மின்-உங்கள் சிரமேற் கொள்ளுங்கள்.

கருத்து;—பெண்மோகத்தால் திகைப்புண்டு அல்லல் படுபவர்கள், இதனின்று தப்பவேண்டும் என்று முயன்றாலும் மனத்திடமின்மையால் மீண்டுமீண்டும் காமநினைவிற்கு ஆளாகி வருந்துகின்றனர். அன்னவரை நோக்கிப் பிள்ளைபெருமாள் ஐயங்கார் "உங்கள் சுயமுயற்சியால் மனத்தை முற்றிலும் அடக்கமாட்டாமை இயற்கையே ஆதலால் அரங்கனைத் துணை வேண்டி அவன் பாதங்களைப் பற்றிக்கொள்ளுங்கள்; மற்றப் பற்றெல்லாம் தாமே உங்களை விட்டகலும்," என்று அறிவுறுத்துகின்றனர்.

விளக்கம்,—ஒவ்வோரடியிலும் முதலில் 'தாளத் தனத்தத்தை' என்னும் எழுத்துக்கள் யமகமாய் வந்திருக்கின்றன.

முதலடியில் அவை, தாளம் தனம் தத்தை, எனப் பிரியும். மாதர் முலைக்கு இளநீர்க்காய், பொற்குடம், யானைத்தந்தம், செப்பு, தாமரைமொக்குள், வல் (சூதாடும் கருவி) முதலியவைகளை உபமானமாய்ச் சொல்வதுபோல், 'ஜாலர்' என்று சொல்லப்படுகின்ற கைத்தாளத்தையுங் கூறுவதுண்டு. தாளம் தனம் தத்தைச் சொல்லியர், என்பதற்கு 'தாளம்போன்ற முலையை உடையவர்களும் கிளிபோன்ற சொற்களைப் பேசுகின்றவரும் ஆகிய மாதர், என்று பொருள் சொல்லவேண்டும். அவ்வாறன்றித் "தாளம்போன்ற முலைகளையுடைய கிளிபோன்ற சொற்களையுடைய மாதர்" என்று தொடரின்போக்கிலேயே பொருள் விரித்து உரைத்தால், தாளம்போன்ற முலை கிளிக்கு இருப்பதாக ஏற்படும். பொருள் சொல்லுமிடத்து இவ்விதம் மயக்கம் உண்டாகாமல் சொல்வதற்குக் கவனத்தைச் செலுத்திப் பயிலவேண்டும்.

இரண்டாமடியில்—'தாளத்துஅனத்தத்தை, எனப்பிரியும். இதனில் 'தாளத்து' என்பது முதலடியீற்றிலுள்ள 'பா' என்பதோடு சேர்ந்து, 'பாதாளத்து' என ஆகும்; பாதாளம் என்பதுசொல். இது ம் என்னும் எழுத்தை ஈற்றில் உடையதாகையால் வேற்றுமை அடைய, அத்துச் சாரியை பெற்றது, (5வது வால். 686, 923வது, பக்கங்கள்). ஆயினும், சாரியை மாத்திரந்தான் இருக்க ஆறும்வேற்றுமை உருபு தொக்கு இருக்கின்றது. அநர்த்தம், என்றவடமொழி அனத்தம் எனத் தமிழில் வருந்திருக்கின்றது. இதுவும் அத்துச்சாரியையும் ஐ உருபும் பெற்று, அனத்தத்தை என ஆயிற்று.

மூன்றுமடியில்—'தாளத்தன் அ தத்தை' எனப்பிரியும். 'தாளத்தன்' என்பது இரண்டாவது அடியின் கடைசியிலிருக்கின்ற வே, என்னும் எழுத்தோடு சேர்ந்து, 'வேதாளத்தன்' என்ற ஒருசொல் ஆயிற்று. அதற்கு அடுத்த அ, என்பது சுட்டெழுத்து;—அந்த என்ற பொருளுடையது. தத்து - ஆபத்து, (கண்டம் என்று வழக்கத்தில் சொல்வதும் இது). 'சிவபிரானுக்கே உண்டான அந்த ஆபத்தைத்தீர்த்தவன் அரங்கன்' எனப்பொருள்படும். சிவபிரான், பிரம்மன் தலையைக்கொய்து கையும்கபாலமுமாய்த் தொலையாத பிச்சை எடுக்கவேண்டி நேர்ந்தது ஒரு தத்து. 'யார்தலையில் கைவைத்தாலும்அவர்சாம்பராய்ப்போகும்வரம் வேண்டும்' என்று கேட்ட பஸ்மாசுரனுக்குச் சிவபிரான் அவ்வரத்தை ஓராது கொடுத்துவிட, அவ்வசுரன் சிவன் தலையிலேயே கைவைக்க வந்தபோது, இந்தக் கடவுள் ஓடவும் அவன் விடமால் துரத்திவர, விஷ்ணு, மோகினி உருவோடு இடையில்தோன்றி மோகம் விளைத்து, தான் நடிப்பதுபோல்அவன் நடிப்பானுயின்சேர்வதற்கிசைவதாகக்கூறி அந்நடனத்தின் ஓர் அபிநயம்போல் விஷ்ணு தன்தலைமீது கைவைத்துக்கொள்ள, அவ்வசுரனும் அவ்வாறே தன் தலையில் கை வைத்துக்கொண்டதால் பெற்றுளவரத்தின்படி அவனே சாம்பராகித்தீர்ந்திடவே, சிவபிரானதுதத்து இது ஒன்றும் திருமாலால் விலக்கப்பட்டது. இவைகளை யாரும் அறிவாரென்ற எண்ணத்தில் இன்னதென்று குறிக்காமல், அத் தத்து, என்றுசுட்டிவிட்டனர் கவி. இவ்விதம் விஷயத்தைக் குறிக்காமல், 'உலகம் அறிந்ததைச் சொல்வதுஏன்' என்னுங் கருத்தில் அ என்னும் சுட்டெழுத்து வரலாம். அவ்வாறுவரும்போது அதனை உலகறிசுட்டு என்று கூறுவார்.

நான்காவதுஅடியில்—தாள் அத்தன் அத்தத்து ஐ (ஆயுதன்) எனட்பிரியும். முதல் பதம், பாதம்என்னும் பொருளுடையதாள்என்னும்சொல். தாள் + அத்தன் = தாளத்தன், என உடல்மேல் உயிர்வந்து ஏறியது. அத்தன் + அத்தத்து = அத்தனத்தத்து என்றுபுணர்வதும் அவ்வாறே. கை என்ற பொருளுடைய ஹஸ்தம்என்ற வடமொழி தமிழில் 'அத்தம்'என்றாயிற்று.

குறிப்பு:—ஐ + ஆயுதன், னென்பது இ ஈ ஐ வழி யவ்வும், என்ற விதிக்கிணங்கி யகர உடம்படுமெய் வந்து, அந்த மெய்யின்மேல் வரும் உயிர்ஏறி ஐ + ய் + ஆயுதன் = ஐயாயுதன் என ஆயிற்று.

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச
னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின்
வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத்
தானைத்தன்பான்
மாதங்கத் தானை வைத்தானை வைத்தேனென்
மதியகத்தே.

பதப்பிரிவு:—மா தங்கம் தானை அரங்கனை வஞ்சன் இலங்கையில்வ மா தங்க தான் ஐ இரு திங்கள் தாழ்த்து பின் வாம் பரிதேர் மாதங்கம் தானை வலத்தானை முன் வதைத்தானை தன்பால் மாது அங்கத்தானை வைத்தானை வைத்தேன் என் மதி அகத்தே.

பதவுரை.

மா - சிறந்த, தங்கம் - பொன்மயமான, தானை ஆடையை அணிந்த, அரங்கனை - அரங்கனுகிய திருமாலை.

வஞ்சன் - வஞ்சகனுன இராவணனது, இலங்கையில் - இலங்கையிலே, மா - இலக்குமியாகிய சீதாபிராட்டி, தங்க - இருக்க, தான் - தான், ஐயிரு -பத்து, திங்கள் - மாதங்கள், தாழ்த்து - பொறுத்திருந்து; பின் - பிறகு, வாம் - தாவுகின்ற, பரி - குதிரைகளும், தேர் - இரதங்களும், மாதங்கம் - யானைளும், தானை - காலாட்படைகளும் ஆகிய, வலத்தானை பலமுடைய அந்த இராவணனை, முன் - முற்காலத்தில், வதைத்தானை-வதைத்த இராமனுக அவதரித்த அந்தத் திருமாலை;

மாது - உமாதேவியை, அங்கத்தானை - தன் உடலில் வைத்திருக்கின்ற சிவபிரானை, தன்பால் - தன்னுடைய வலப்பாகத்தில், வைத்தானை - வைத்திருக்கின்ற திருமாலை;

என்-என்னுடைய. மதி அகத்தே-மனதிற்குள்ளே. வைத்தேன் - ஒருபோதும் நீங்கவிடாமல் வைத்திருக்கின்றேன்.

கருத்து:—சிவபிரானைத் திருமால் தன் வலதுபக்கத்தில் வைத்திருக்கின்றார் என்பது மரபு. சிவபிரான் உமையைத் தன் இடப்பக்கத்தில் வைத்திருக்கின்றார். உமையை வைத்திருக்கின்ற சிவபிரானை வைத்திருக்கின்ற திருமாலைத் தான் தன்னுடைய மனதில் வைத்திருப்பதாகச் சொல்லி மகிழ்கின்றார் கவி. இவ்விதம் ஒன்றன்மேல் ஒன்றாய் உரைத்துக் கொண்டுபோவது ஸாராலங்காரம் எனப்படும் மேன்மேலுயர்ச்சியணி, இதன் இலக்கணத்தை விரிவாக, (வால்யூம் 6, 649 வது பக்கத்தில்) 'மறிக்குங்கயற்கண்ணி' என்று தொடங்குகின்ற திருவரங்கத்துமாலைச் செய்யுளின்கீழ், சொல்லியிருக்கின்றோம்.

விளக்கம்:-மாதங்கத்தானை, என்பன, வெவ்வேறு விதமாய்ப்பிரிந்து அடிதோறும் வெவ்வேறு பொருள் தரும்படி வந்திருப்பதால், இது யமகம் ஆகும். முதலடியில்—மா தங்கம் தானை, என அவை பிரியும். மா என்பது சிறந்த என்னும் பொருளுடைய உரிச்சொல். தானை - வஸ்திரம்; இதுவே ஆனை என்பது போல் முதல்வேற்றுமை உருவம். ஐயில் முடிவதால் இரண்டாம் வேற்றுமையோ என்று மயங்கவேண்டா. இரண்டாம் வேற்றுமை உருபுபெற்றால் 'தானையை' எனவரும். "முன்றில் தனின் மேல்படுக்கமுன் தானையும் இன்றி" என்று முன் (5-வதுவால்யூம்785-வது பக்கத்தில்) நளவெண்பாவில், தானை என்பது ஆடை என்ற பொருளில் வந்திருக்கின்றது. 'தானை அரங்கனை' என்பது, ஆகையால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை - தானையை அணிந்த அரங்கன் என விரியும். தங்கத்தானை என்பது பீதாம்பரம். "அலங்கார ப்ரியோ விஷ்ணு" என்பதற்கிணங்கப் பீதாம்பர தாரியாகிய ஸ்ரீரங்கன், என்கின்றார் கவி. தானை + அரங்கனை — தானையரங்கனை என ய் உடம்படுமெய்யாக ஐக்குப்பின் வந்தது.

இரண்டாமடியில்—மா தங்க தான் ஐ(இரு)எனப் பிரியும். மா என்பது இங்கு இலக்குமி என்னும் பொருளுடைய பெயர்ச்சொல்; தங்க, வினையெச்சம்; தான் என்பது இராமனைக் குறிக்கின்றது. இந்தத் தானை என்பது தான் என்பதன் இரண்டாம் வேற்றுமை அன்று. தான் என்பதன் இரண்டாம் வேற்றுமை, 'தன்னை' என்று ஆகும். ஆகையால் அந்த ஐ இரண்டாம் வேற்றுமை உருபன்று; ஐந்து என்பதன் விகாரம் அந்த ஐ. தான் + ஐ = தானை, என, மெய்யின்மேல் வருமொழி உயிராகிய ஐ ஏறிற்று. ஐ + இரு = ஐயிரு என யகர உடம்படுமெய் வந்தது.

மூன்றாமடியில்—மாதங்கம் தானை, எனப்பிரியும். மதங்கமுனிவரிடமிருந்து பிறந்ததால் யானைக்கு மாதங்கம், என்ற பெயருண்டு. தானை, என்பது, சைந்நியம் என்றிருக்கின்ற இன்னொரு பொருளில் இங்கு வந்திருக்கின்றது.

நான்காவது அடியில்—மாது அங்கத்தானை, எனப் பிரியும். உமை யாகிய மாதை அங்கமாக உடைய சிவபிரானை, என்பது பொருள். அங்கத்தானை, இரண்டாம் வேற்றுமை. அந்த அடியில் வருகின்ற 'வைத்தானை' என்பது வைத்தவனை, என்ற பொருள் தருகின்ற இரண்டாம் வேற்றுமை வினையாலணையும் பெயர். இவ்வினையாலணையும் பெயரின் இலக்கணம் (5-வது வால்யூம், 263, 508-வது பக்கங்களில்) கூறப்பட்டிருக்கிறது.

இலக்கணம்

வகரமெய்யும் யகர மெய்யும், உடம்படுமெய்களாக நிலைமொழி உயிரும் வருமொழி உயிரும் புணரும் போது வருகின்ற இடங்களைப் பார்த்தோம். அதனில், ஏ என்பது நிலைமொழியாயிருந்து வருமொழி முதல் உயிரோடு புணருங்கால், பெயர்ச்சொல்லாயிருக்குமானால், வகர உடம்படு மெய்யும், இடைச்சொல்லாயிருக்குமானால் யகர உடம்படுமெய்யும் வருமென்று, "ஏமுன் இருமையும்" என்றதைவிவரித்தோம். இவ்விதம்சிறப்பாக விதிபெற்றிருக்கிறசொல் தமிழில் மா என்பதும் ஒன்று. இது 'ஆ' என்னும் உயிரீற்றுச் சொல்லாகையால், வருமொழி முதலில் வரும் உயிரொடு புணரும்போது, ஏனையுயிர்வழி வவ்வும், என்ற விதிக்கிணங்க வகரஉடம்படுமெய்மாத்திரம்பெறுதல் வேண்டும். எனினும், ஏ என்னும் சொல்லைப்போல், மாவென்னும்சொல்லும் யகரஉடம்படுமெய்யை ஒருசமயமும் வகரஉடம்படுமெய்யை மறுசமயமும்பெறலாகின்றது. மா, என்பது 'மா தங்கத் தானை என்றதில் போல்' 'சிறந்த அல்லது'பெரிய'என்றபொருளுடைய உரிச்சொல்லா யிருக்கலாம். அல்லது, இலக்குமி மாமரம், மிருகம், என்பன போன்றபலபொருள்களைத்தருகின்ற பெயர்ச்சொல்லா யிருக்கலாம். நிலைமொழி மா உரிச்சொல்லாயின், அது வருமொழிமுதல் உயிரொடு புணரும்போது, ஏனையுயிர்வழி வவ்வும் என்றதற்கு இணங்க வகர உடம்படுமெய் வாராமல், யகரஉடம்படுமெய்யே இலக்கியங்களில் வரக் காண்கின்றோம்:—

மா + இரு = மாய் + இரு = மாயிரு, என்றாகின்றது (மா = பெரிய, இரு = விசாலமான) இங்கு மா என்பது உரிச்சொல்.

"மாயிருவிசும்பின்கங்கை மண்மிசைஇழித்தோன் மைந்த" என்று கம்பராமாயணத்திலும், "மாயிரு ஞாலந்தன்னில் மகம்பல இயற்றிப்பெற்ற" என்று நைடதத்திலும் பயின்றிருக்கக் காணலாம்.

மற்று, மா என்பது பெயர்ச்சொல்லாயின் முன்னுரைத்த விதிகளின்படி வகரமே உடம்படுமெய்யாக வரும்:—

மா + அமரும்மலர் = மா வமரும்மலர்(இலக்குமி)
மா + இலை = மாவிலை = (மாமரம்)
மா + உறையும் காடு = மாவுறையுங்காடு (மிருகம்)

'மாவியல் நோக்கினாள்' (மா + இயல் = மாவியல், மாவடுஅனைய கண்ணையுடையவள்) என்று கம்பராமாயணத்தில் வந்திருக்கின்றது.

இனி, அரசன் அல்லது கடவுள் என்ற பொருளுடைய 'கோ' என்னும் ஓரெழுத்துஒருமொழி யிருக்கின்றது. இதன்பின் உயிர்வரின், 'ஏனை யுயிர்வழி வவ்வும்' என்றபடி வகரஉடம்படுமெய் தோன்றும்:— கோ + அழைத்தான் = கோ + வ் + அழைத்தான் = கோவழைத்தான். கோ + ஏ = கோவே. (அரசனே). ஆனால், கோ என்பதன்பின் 'இல்' என்ற சொல் வருமாயின், கோ + இல் = கோயில் கோவில்; என இருவிதமாகவும் வழங்குவதுண்டு. (கோயில் கோவில், என்ற இவ்விரண்டிற்கும் அரசனுடைய வீடு, (அல்லது கடவுளுடைய வீடு என்பது பொருள்). ஆகையால் யகரம் வகரம் இரண்டும் வரக்காண்கின்றோம். எனினும் கோ' என்ற சொல் இரண்டு உடம்படுமெய்யையும், பேதமில்லாமல் ஏற்கும்என்றுஎண்ணப்படாது. அது இலக்கணப்படி ஏற்பதும் கோவில், என வகர உடம்படுமெய்யே யாகும். எனினும், இலக்கணத்திற்கு இணங்கிய கோவில் என்னும் அந்தச் சொல் அநாதிகாலமாய்க்கோயில்என்றும் வழங்கப்பட்டுவருகிறது. எனினும், கோயில் என்பதிலுள்ள யகரமெய்உடம்படுமெய் அன்று. கோவில் என்பதிலுள்ள வகரமெய்யேஉடம்படு மெய். இவ்விதம் இலக்கணமுடைய ஒரு வழக்கிற்கு இணையாய், இலக்கணம் இல்லாத இன்னொரு வழக்கும் ஒருங்கே யேற்பட்டதுபோல் பண்டைக் காலத்தில் தோன்றி இரண்டும் வித்தியாசமின்றிப் பயின்று வருமாயின், அது இலக்கணப்போலி என்னும் இயல்பு வழக்கில் அடங்கும். தமிழில் சொற்கள் வழங்கிவருகின்றதற்கு உரிய தன்மைகளையும், அதனில் 'இலக்கணப்போலி' யைப் பற்றியும் முன்னர் (5வது வால்யூம், 808வது பக்கத்தில்) விரிவாக உரைத்திருக்கின்றோம். கோவில், என்பது இலக்கணமுடையது, அதன் இலக்கணப்போலி, கோயில்; ஆதலின், 'கோயில்' என்பதிலுள்ள யகரமெய்யை உடம்படுமெய் என்று கூறப்படாது.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[746-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னவாறு நம்முடைய முயற்சியானது எதிரெழுந்த தடையை எத்துணை காலம் பொறுத்திருக்கக் கூடும் என்பது நம்முடைய அக்கரைநிலையின் அமைப்பைப் பொறுத்திருக்கின்றது. இவ்வாறு உன்னிப்புமறித்தெழுதலும், உள்ளச்செயனிலையின் தொடர்ச்சியினை விளக்குகின்றதல்லவா? பொதுவாக ஆராயுமிடத்து, இவ்வாறு தடை நிகழ்ந்தபோது இடையிட்டிருந்து பின்னர் மறுபடியும் கிளம்புதல் உள்ளச்செயலின் சிறப்பியல்பாகும். உயிரில்லாப் பொருள்களின் செயலோ, தடை எழுந்தவுடன் மறைந்து போகின்றது. பின் தடை நீங்கினால் தானாக மறுபடியும் இயங்கத் தொடங்குவதில்லை. கல்லை மிக வலிவோடும் வீசி எறிகிறேன். தடையில்லாதிருக்குமானால் அக்கல் 50 அடி தொலைவில் விழும். எதிரே ஒருவன் வந்து அதைக் கையிலே பிடிக்கின்றான்; தடை படுகிறது. அவன் அதைக் கீழே நழுவ விடுகின்றான். முன்னைய விசையோடு 50 அடி தொலைவு செல்வதில்லை. ஆனால் நம்முள்ளத்தின் செயலோ, தடைபட்டால் இடையீடுபட வாளா இருந்து, தடை நீங்கியதும் பழையபடி முன்னைய வழியே செல்கின்றது.

எத்துணை வேலைகளை ஒருவன் ஒரு முறையிலேயே செய்யக்கூடும் என்ற ஆராய்ச்சியும் ஒருவகையால் நோக்குமிடத்து இத் தொடர்ச்சிநிலையைப் பற்றியதேயாம். பொதுவாக நாம் அனைவரும் இரண்டு வேலைகளை ஒருங்கே செய்தல் கூடும். இதை எழுதிக்கொண்டேயிருக்கிற நான் இடையிடையே எனது நண்பர் ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கும் விடை யளித்துக்கொண்டே வருகின்றேன். ஆயினும், இத்தகைய ஆற்றல் பொதுவாக நம்மிடையே சிறிதளவே யுண்டு. லீஸர் என்ற பெரியார் நான்கு பேர் பட்டோலை பிடித்தெழுத நான்கு வேறு இடங்களைச் சொல்லிக்கொண்டு வருவாராம். நாமோ ஒரு பாட்டை எழுதும்போது வேறொரு பாட்டை ஒப்புவிப்பதென்றால் அதற்கே தட்டித் தடுமாறுகின்றோம். வாயால் ஒப்புவிக்கப் புகுந்த பாடல்களினடிகளைக் கையால் எழுதிவிடுகின்றோம். நம்முடைய உள்ளச் செயலில் ஒன்று தடைபட்டால் மற்றொன்று வந்து தொடர்ந்து போகிறது என நாம் முன்னர்க் கண்ட வுண்மையை இதுவும் வற்புறுத்துகிறதல்லவா? கைப்பாட்டால் வாய்ப்பாட்டுத்தடைபட்டது; அதன்பின் கைப்பாட்டுத் தடைபடுகிறது; உடனே முன் தடைபட்டு நின்ற வாய்ப்பாட்டானது பழைய தடை நீங்கவே கைப்பாட்டாகக் கைவழியே வந்து புகுந்து தொடர்ச்சியாகப் போகின்றது. இவ்வாறன்றித் தடைபடாது இரண்டு வேறு தொழில்களை ஒரு முறையிலே செய்வது நாம் அத் தொழில்களைச் செய்யப் பழகிய நிலைமையைப் பொறுத்தும், அத்தொழில்கள் ஒன்றோடொன்று இயைபுபடாது வெவ்வேறு பிரிந்து நிற்பதைப் பொறுத்தும் இருக்கின்றது. பழக்கமாகிய ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது நாம் வேறொரு வேலையையும் உடன்செய்வது எளிதேயாம். மிதிவண்டி (Cycle சைகில்) ஏறிச் செல்லுவோன் பாட்டும் பாடிப்போகலாம். செய்யப்புகுந்த வேலை ஒன்றோடொன்று ஒப்புமையுடையதானால், இரண்டு பாட்டை ஒப்புவிக்கும் போது ஒரு பாட்டினடி மற்றொரு பாட்டில் நுழைவதுபோல, இரண்டு வேலைகளும் ஒன்றாகக் குழம்பிவிடுகின்றன. செயனிலையின் தொடர்ச்சியை, நாடோறும் நமக்கு நிகழும் மற்றொரு நிகழ்ச்சியும் வற்புறுத்துகின்றது. ஏதோ செய்யத் தொடங்கினோம், சிறிதளவுசென்றதும் நம்முடைய நோக்கத்தையோ அதன் வழியையோ நாம் அறவே மறந்தபோதிலும் முன்னே நடந்து போனவழியிலேயே நாம் போய்க்கொண்டிருக்கின்றோம். பின்னர் எதற்காக நாம் வந்தோம் என விழிக்கின்றோம். ஓர் அறையிலே போய் ஏதோ எடுக்க வேண்டும் எனத்துணிந்து அவ்வறைக்குள்ளே போய் அங்குள்ள பேழையைத் திறக்கின்றேன். திறந்தபின் 'எதற்காக வந்தேன்' என்பது எனக்குத் தோன்றாமையால் நினைவு கூட்டிக்கூட்டிப் பார்க்கின்றேன். ஒன்றும் விளங்காமையால் திரும்பி வந்துவிடுகின்றேன். "இது வேண்டும்" என்பதை யறிந்த அறிவுநிலை இவ்வாறு அழிந்தபிறகும் அதனைச் செயல்படுத்த எழுந்த முயற்சிநிலை தொடர்ந்து நிகழ்வதால் அன்றோ பேழையெதிரே போயினேன். எழுதிக் கொண்டே வருகின்ற எனக்கு ஏதேனும் ஒருசொல் மனத்தே எழுகின்றது. அடுத்த இமைப்பொழுதிலேயே அது தக்கசொல் அல்ல எனத் துணிகின்றேன். என்றாலும் என் கை அந்தத் தவறானசொல்லையே எழுதிவிடுகிறது. எழுதுகோல் கொண்டு அடித்துத் திருத்தவேண்டி யிருக்கின்றது. செயனிலையின் தொடர்ந்து நிகழும் தன்மையால் ஏற்பட்டதோர் புதுமையாகும் ஈது. இவ்வாறு நாம் செய்யத் தொடங்குவன தொடர்ந்து நிகழ்வதாலன்றோ, நம்முடைய செயல்களுக்குத் தடை நேர்ந்தபோதும் (அவை) மறையாது தடை நீங்கும் வரை காத்திருந்து, நீங்கியதும் பழையபடி நிகழ்கின்றன. அதனாலல்லவா, இரண்டு தொழில்களை ஒரு முறையிலே செய்ய முடிகின்றது. அஷ்டாவதானி சதாவதானி என மக்கள் ஒருமுறையில் பலதொழில் செய்வதில் வெவ்வேறு நிலையில் இருக்கிறார்கள். நம்மைப் போன்றவரிடையே இத்தொழில்கள் மாறிமாறி இடையீடுபட்டு நிகழ்கின்றன. நரம்புக் கிளர்ச்சியிலே நோயடைந்தவர்கள் இத்தகைய இடையீடின்றி இரண்டு தொழில்களை நெடுகத் தொடர்ந்து செய்கின்றனர். அது நோய்நிலையே யாகும்.

நமது உள்ளச்செயல் அல்லது முயற்சி தொடர்ந்து நிகழ்வதைமுன்னர்க் கண்டோம். தொடர்ச்சியேயன்றி ஒற்றுமைத் தன்மையையும் அங்குக் காண்கின்றோம்.

உள்ளச்செயலின் ஒற்றுமைத் தன்மையை மனத்தில் வைத்துக் கொண்டே, ஒரு சிலர் நமது மனம் ஒரு குறித்தபொழுதில் ஒரு பொருளுக்குமேல் ஒருமுறையில் உன்னிப்பாக நோக்குவதில்லை என்று கூறுகின்றனர். நம்முடைய உள்ளமோ உயிரோ மிகமிக நுண்ணியதான அணுவடிவினதென்றும் அணு அணுவாகப் பொருளில் தங்கித்தங்கி அறிந்து வருகிறதென்றும் சிலர் கனாக் காண்கின்றனர். உள்ளம் ஒருமுறையில் ஒன்றைத்தான் அறியும் என்பதற்குஈதல்ல பொருள். தான் உள்ளுகின்றவற்றை ஒன்றாக இயைய வைத்து உள்ளும் என்பதே கருத்து. மலையின்மேல் இருந்து கீழே அடியில் கிடக்கும் ஊர் முழுதையும் ஒன்றாக ஊர் என ஒற்றுமைப்படுத்தி உன்னிப்பாக நோக்குதலும் கூடும். அதிலே ஒரு பிரிவினைத் தெருவென ஒற்றுமைப்படுத்தி உன்னிப்பாக ஆராய்தலும் கூடும். ஒருவீட்டையோ அல்லது அவ்வீட்டின் முகட்டையோ இவ்வாறே தனியே பிரித்து உன்னிப்பாக நோக்குதலும் கூடும். வீட்டைவிட்டு, எதிரேயுள்ள சுவரையோ, சுவரிலுள்ள ஓர் ஓவியத்தையோ, ஓவியத்தில் எழுதியுள்ள கண்ணனின் கண்ணையோ, அந்தக் கண்ணில் ஒளிரும் கருவிழியினுட்புள்ளியின் திறத்தையோ பிரித்துப் பிரித்துத் தனியே வைத்து உற்று நோக்கி உன்னிப்பாக ஆராய்தலும் கூடும். காணப்படும் பொருள் ஒன்றேயாயினும் பலவேயாயினும், அவற்றை இவ்வாறு இயைபுபடுத்திக் காணும் ஒற்றுமைக்காட்சியினையே கூறவந்தோர் ஒருமுறையில் ஒன்றைத்தான் உன்னித்தல் (attend) கூடும் எனக் கூறுவாராயினர்.

ஊரிலுள்ள தெருவையும், தெருவில் வீட்டையும், வீட்டில் சுவரையும், சுவரில் ஓவியத்தையும், ஓவியத்தில் கண்ணனையும், கண்ணன்வடிவிலே கண்ணையும், அக்கண்ணிலே கருவிழியையும் பிரித்துப் பிரித்துக் காட்சியின் எல்லையைச் சுருக்கி ஒருமுகப்படுத்திப் பார்ப்பதனைத்தான் ஒருமுனை நோக்கம், ஒருமுகப்பாடு, ஏகாக்ர சித்தம், கூர்ந்து நோக்குதல் அல்லது கூர்ந்தெண்ணுதல், (Concentration) எனச் சிலர் வழங்குகின்றனர். இச் சொற்றொடர்களையே வேறு சிலர் பொது நோக்காக அன்றிச் சிறப்புநோக்காக நோக்குவதனைக் குறிப்பதற்கு இவ்வாறு பயன்படுத்திக்கொள்ளாமல், உன்னிப்பின் உரப்பினையும் வன்மையையும் குறிப்பதற்கே அவற்றைப் பயன்படுத்துகின்றனர். முன்னுரைத்தபடி உந்து வண்டியில் ஏறிச்சென்ற மூவரும், அங்கெழுந்த புதிய ஓசையை மூன்று வேறு நிலையில் உன்னிப்பாக நோக்கியதைக் கண்டோம். வண்டியை ஓட்ட அறியாதவனைவிட அதை ஓட்டிச் சென்றவனுடைய உன்னிப்பு ஒருமுனைப் பட்டிருந்ததென்று வழங்குவர். அங்கே சிறப்பு நோக்கம் என்பதல்ல பொருள்; உன்னிப்பு மிக்கு இருக்கின்றது என்பதே பொருள். நம் ஆற்றல் முழுதும் உன்னிப்பாக ஒருமுனைப்பட்டு வழிகிறது என்பதையே சுட்டுகின்றோம். காட்சிப்பொருளின் ஒருமுனைப்பாடும், உன்னிப்பின் ஒருமுனைப்பாடும் வெவ்வேறு நிலையைச் சுட்டுகின்றன என்பதை மறத்தல் ஆகாது. காட்சிப் பொருளின் ஒருமுனைப்பாடு நிகழும்போதெல்லாம் உன்னிப்பின் ஒருமுனைப்பாடு உண்டு எனக்கொண்டு மயங்குதல் கூடாது. உன்னிப்பின் உரப்பு, அவ்வுன்னிப்பைத் தூண்டிய வேட்கையின் வலிவைப் பொறுத்திருக்கின்றது. பொருள்களைச் சிறப்பாக நுணுகி ஆராய்தல் நம்முடைய நோக்கத்தைப் பொறுத்திருக்கின்றது. மலைமேல் இருந்து கீழேயுள்ள பொருளைப் பொதுவாக உன்னிப் பார்க்கும்போது காட்சிப்பொருளின் ஒருமுனைப்பாடாம் சிறப்பு நோக்கம் இல்லையானாலும் என்னுடைய உன்னிப்பு வலி மிக்கதாக இருத்தல் கூடும். மலைமேலேறிப் பார்க்கும் நான் ஒற்றனாக அப் பகைவரூரைப் பார்ப்பேனானால், என்னுடைய படையாட்சியாருடைய உயிரையும் பெருமையையும் என் கையில் பிடித்துக்கொண்டு பார்க்கின்ற நான் அவ்வூரினை உயிரினும் சிறந்ததாகக்கொண்டு கண்ணும் கருத்துமாக உன்னிப்பாக ஆராய்கின்றேன். அவ்வூரையே வழிப்போக்கனாக மேலேறிப்பார்ப்பேனானால், என்னுடைய உன்னிப்பு மேலளவாக நின்று வேர்விடாமல் சிறிதுபொழுதில் மறைந்துபோகிறது.

எவ்வளவுக்கெவ்வளவு நம்முடைய உன்னிப்பு உரம்பெற்று விளங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நமது செயலும், கொண்ட நோக்கத்திற்கேற்றபடியே திறம்பெற்று விளங்குகின்றது; தடைகள் ஏற்பட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் விலக்கிவெற்றியடைகின்றோம். இந்தத் திறமையும் தடைவிலக்கும் நம் உன்னிப்பின் உரத்தை அளந்து காட்டும் அளவைகளாம். உன்னிப்பிருந்தால் அறிவைத் தக்கவழியிற் பயன்படுத்துகின்றோம். இல்லாமற்போனால் அங்குமிங்குமலைந்து அரைத் தூக்கமாய் நின்று தடுமாறுகின்றோம். உன்னிப்பிருந்தாலோ கண்ணும் கருத்துமாய் உழைக்கின்றோம். இயற்கைச் செயனிலையைத் தூண்டும் வேட்கைவழியே இயங்கும் விலங்குகளைக் கண்டால் இவ்வுண்மை விளங்கும். பசியால் வாடியலையும் நாயையோ, முக்காரமிட்டோடும் எருதையோ காண்க. செயற்கைச் செயனிலையிலும் இவ்வுரப்புச் சிற்சில இடங்களில் தோன்றுகின்றது. பந்தாட்டத்தில் மிக்க அக்கறையுள்ள சிறுவர்கள் வேறொன்றையும் நோக்காமல் அதையேஎண்ணி அலைவதை நாம்பார்த்ததில்லையா? கண்ணைமூடினாலும் பந்தாட்டமே தோன்றும். கனாவிலும் அதனையே காண்பர்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

என்பது இந்நிலையை நன்கு விளக்குவதாம். விழுந்த அடியையும் அறியாமல் விளையாட்டிலே நாட்டமான சிறுவர்களிடையேயும், போரிலே தம்முடைய நோவனைத்தையும் மறந்து மும்முரமாகச் சண்டையிடும் படையாளரிடையேயும், சோற்றைக் கண்டு ஓடிவரும் பட்டினி நாயிடையேயும், மற்றைய வழியனைத்திலும் ஓடும் நரம்புக்கிளர்ச்சிகள் தடைபடுவதால் வேறொன்றும் புலனாகாதபடி ஒன்றிலேயே மனமானது சிக்கிக் கிடப்பதை நேரே பார்க்கலாம்.

செயலின் திறப்பாடும், தடை நீக்கமும்போல உன்னிப்பின் உரத்தை அளந்தறிவதற்கு மற்றோர் அளவுகோலும்உண்டு. முயற்சிநிலையின் தொடர்ச்சியினால் நம்முடைய உன்னிப்பு உரப்புடையதாயின், இடையீடு நேர்பட்ட பொழுதும், பின்னும் பின்னும் அவ்வுன்னிப்பானது திரும்பவும் திரும்பவும் எழுகின்றது. அக்கறை அவ்விடையீட்டை நிரப்பிவிடுவதால் ஒரு

தொடர்ச்சியை நிலைநாட்டுகின்றது. இதனால் ஒரு ஒற்றுமை தோன்றுகின்றது. இவ்விடையீடு சிலபொழுது இமையளவாக இருக்கலாம்; சிற்சிலபொழுது நாளளவாக இருக்கலாம். சிற்சிலபொழுது ஆண்டளவாகவும் இருக்கலாம். சீட்டாடும்போது இடையீடு நேருமானால், இரண்டொரு இமைப்பொழுதளவே அவ்விடையீட்டைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும். இடையீடு மிகுவதானால் சீட்டாட்டத்தை மறந்தே விடுகின்றோம். உன்னிப்புக்காலந் தாழ்க்குமானால் திரும்புவதே யில்லை. தடை நீங்கினால், அந்த ஆட்டத்தை விட்டுவிட்டுப் புதிய ஆட்டமே தொடங்குகின்றோம். ஆனால் ஒருநூலை எழுதத் தொடங்கினால், ஆண்டளவாக இடையீடு நேர்ந்தாலும், பின்னே நம்முடைய உன்னிப்புத் திரும்பி எழுகிறது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[749-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 1-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

வைகல் பூங்கழிவாய் வந்து மேயும்
குருகினங்காள்
செய்கொள் செந்நெலுயர் திருவண் வண்டூ
ருறையும்
கைகொள் சக்கரத் தென்கனி வாய்ப்பெரு
மானைக்கண்டு
கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன்
காதன் மையே.

அவதாரிகை:—ஆழ்வார் தம் தசையை, பகவானோடு கலவை ஏற்பட்டுப் பிரிந்த ஒரு பிராட்டியின் வாசகத்தால் பகவானுக்கு இந்தப் பத்தில் விண்ணப்பம் செய்வதாகப் பாடியிருக்கிறார். அந்நியோபதேசத்தில் சொன்னதைச் சுவாபதேசத்தில் மாற்றி அர்த்தம் கொள்ளவேண்டும்.

பதக்குறிப்புகள்:—வைகல்-எப்போதும்; பூங்கழி-புஷ்பங்கள் மலர்ந்துள்ள நீரோடை. செய்கொள்—வயல்களில்.

பொழிப்புரை:—எப்பொழுதும் மலர்ந்தபூக்களால் நிறைந்த கழியின் இடத்தில் வந்துமேயும்குருகுக்கூட்டங்களே, நன்செய் வயல்களில் செந்நெல் பயிர் உயர்ந்து வளர்ந்து இரமணியமான உத்தியானவனங்கள் சூழ்ந்த அழகான திருவண்டூரில் பள்ளிகொண்டிருப்பவனும், கையில் திருச்சக்கரமேந்திய அழகாலும்கனி போன்ற உதடுகளாலும் என்னை வசப்படுத்தி விட்டுப் போனவனுமாகிய எம்பெருமானைக்கண்டு கைகளைக் கூப்பிக்கொண்டு வினயத்துடன் என்னுடைய ஆறாத ஆசையை அவன்பால் விண்ணப்பம் செய்யுங்கோள்

விசேஷக் குறிப்பு:—இப்பிராட்டியின் மனோபாவம் பகவான் தன் ஐசுவரியத்தாலும் ரமணியமான வாஸஸ்தலத்தாலும் தன்னை மறந்தானென்றும் ஞாபகம் மூட்டினால் தனக்கு அருள்செய்வானென்றும் குருகுகளை விண்ணப்பம் செய்யச் சொன்னபடி.

2-ம் பாசுரம்.

காதல் மென்பெடை யோடுடன் மேயும்
கருநாராய்
வேத வேள்வியொலி முழங்கும் தண்டிரு
வண்வண்டூர்
நாதன் ஞாலமெல்லா முண்ட நம்பெரு
மானைக்கண்டு
பாதங் கைதொழுது பணியீ ரடியேன்
திறமே

உன் பிரியமே வடிவெடுத்து வந்தாற்போல் உனக்கு வெகுபிரியமான பேடையோடு மேயும் நாரைப் பக்ஷியே. வேத நூலில் நியமித்த யாகங்கள் கோஷத்துடன் முழங்கும் திருவண் வண்டூரில் பிரளயகாலத்தில் தன் வயிற்றில் எல்லா உலகங்களையும் வைத்து ரக்ஷித்த நம் பெருமானைக்கண்டு திருப்பாதத்தில் தொழுது என் தனிநிலைமையை நீயும் உன்பேடும் விண்ணப்பஞ் செய்யுங்கோள்.

விசேஷக் குறிப்பு:-(1)நாரை வெள்ளை வர்ணமான பக்ஷியாம்-அதை இப்பிராட்டி "கருநாராய்" என்றது, தான் பகவானிடத்திலுள்ள காதலால் வெளுத்திருப்பதுபோலில்லாமல் தன் பேடையோடு கலவியிலிருப்பதால் கருத்த மேனியோடிருப்பதாகத் திருவுள்ளம் பற்றிச் சொல்லியபடி. (2) ஞாலமெல்லா முண்டதை எடுத்தது-பகவான் பரமகாருணிகன்-உங்கள் வேண்டுகோளை ஏற்காதிருக்கமாட்டான் என்பது (3). பணியீர் என்றது-பெண் நாரையையும் வேண்டிக்கொண்டபடி (4). முன் பாசுரத்தில் குருகுகள் திரும்பி வாராதிருக்கவே நாரைகளை இப்பிராட்டி தூது விடுகின்றாளென்று கொள்ளவேண்டும். (5) முதல் பாசுரத்தில் "கைகூப்பு" மாத்திரம் உரைத்த பிராட்டி இங்குத் திருப்பாதங்களில் விழுந்து தொழச் சொல்லுகிறாள்.

189166

3-ம் பாசுரம்.

திறங்க ளாகியெங்குஞ் செய்க ளூடுழல் புள்ளினங்கா
சிறந்த செல்வ மல்கு திருவண் வண்டூருறையும் [ள்
கறங்கு சக்கரக் கைக்கனிவாய்ப் பெருமானைக் கண்டு
இறங்கநீர் தொழுது பணியீ ரடியே னிடரே.

உரை:—திறங்களாகி-திரண்டு கூட்டங்களாகி, எங்குஞ்செய்கள்-நன்செய்வயல்கள் எங்கும், ஊடு -மத்தியில், உழல்-அங்குமிங்கு மோடித் திரிகிற, புள்ளினங்காள்-பலஜாதி பக்ஷிகளே, சிறந்த செல்வம்மல்கு-உத்தமமான செல்வம் நிறைந்த, திருவண்வண்டூர் க்ஷேத்திரத்தில், உறையும்-நித்தியவாஸம் செய்கின்ற, கறங்கு - பகவானின் ஆச்ரித விரோதிகளை ஸம்ஹாரம் செய்ய அவசரபட்டுச் சுழன்று வருகின்கிற, சக்கரக்கை - சக்கராயுதத்தை ஆபரணமாகக்கொண்ட திருக்கையும், கனிபோன்றவாயுமுள்ள பெருமானைக்கண்டு இறங்க-என் நிமித்தம் கௌரவம் பாராதே தாழ்ந்து, நீர் தொழுது-நீங்கள் வணக்கமாய்த் தொழுது, அடியேன் - சுதந்திரமாய் ஒரு செய்கைக்கு யோக்கியமில்லாத தாஸனின், இடரை-துயரத்தை, பணியீர்-சொல்லவேண்டும். வேண்டுகோளாகையால் "பணி" என்ற பூஜாவாசகம் வந்தது.

4-ம் பாசுரம்.

இடரில்போகமூழ்கியிணைந்தாடுமடவன்னங்காள்
விடலில்வேதவொலிமுழங்குந்தண் திருவண்வண்டூர்
கடல்மேனிப்பிரான் கண்ணனைநெடுமாலைக்கண்டு
உடல்நைந்தொருத்தியுருகுமென் றுணர்த்துமினே

ஸௌந்திரிய ஸௌலப்பிய வாத்ஸல்ய கல்யாண குணங்களுக்குக்கடலானநீலமேகனைக் கண்டுஅய்யோ, ஒருத்தி உடல் மெலிந்து படும்பாடே இது வென்று அறியச்சொல்லுங்கோள் என்று அத்தியந்தகலவியை அநுபவித்துக்கொண்டு இன்பத்தை நுகர்கின்ற ஆண் பெண் அன்னங்களைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

குறிப்பு:—இன்னாரென்றசொல்லவேண்டாம். பேர் சொல்லாமலே பகவான் நான் யாரென்பதை அறிந்து கொள்ளக்கூடும்.

5-ம் பாசுரம்.

உணர்த்த லூட லுணர்ந்துடன் மேயும்
மடவன்னங்காள்
திணர்த்த வண்டல்கள்மேல் சங்கு சேரும்
திருவண்வண்டூர்
புணர்த்த பூந்தண் டுழாய்முடி நம்பெரு
மானைக்கண்டு
புணர்த்த கையின ராயடி யேனுக்கும்
போற்றுமினே.

அவதாரிகை:—முன் சென்ற பாசுரத்தில் இப்பிராட்டி தன் தேகம் "நைந்து" (அதாவது நாயகனுடைய பிரிவு நீடித்து வெகுகாலம் சென்றுவிட்டதின் நிமித்தம்) மெலிந்து வருந்திவிட்டதாகக்கூறினாள். இப்பாசுரத்தில் ஊடலின்பொருட்டு நீங்கியநாயகன் திரும்பித் தன்னைச்சேர்ந்து மனம் ஒப்பி உணர்த்தல்வயின் வர நேரமாயிற்று. அவனது ஊடல்தீர்க்க இரண்டொரு பிரிய வார்த்தைகள் மாத்திரம் உரைத்தால் போதும், நிரம்ப மாற்றமும் வேண்டுவதில்லை; என் நாயகனை பகவான் தன் பிரிய பாரியையாகிய துளசியைத் தன் சிரஸில்தரித்துகொண்டிருக்கிற தயாபுருஷன்; அவன் கடிதின் எனக் கருள்செய்வான்.

உரை:—உணர்த்தல் ஊடல் உணர்ந்து—உணர்த்தல் என்ன (அதாவது சில்லரை மனஸ்தாபத்தால் நாயகன் கலகப்பட்டுப் பிறகு நல்ல வார்த்தைகளால் தேறித்தெளிந்து) ஊடல்என்ன-கலகப்பட்டுப்பிணங்குதல், உணர்ந்து-முதலில் ஊடிப் பிறகு மனந்தெளிந்து இரண்டு அவஸ்தையும் அநுபவித்து, உடன்மேயும் - தேர்ச்சிநிமித்தம் பிரியாமல் ஒன்றாகூடி இரைதேடும், மட அன்னங்காள் - இளமையான அன்னங்களே, திணர்த்த - நெருங்கிய, வண்டல்கள்-வெள்ளம் ஓடினபிறகு மேடுஇட்ட வண்டலாகிய மண்களின்மேல் சங்குகள் சேரும் திருவண்வண்டூரில் தண் துளப மாலை தரித்த பெருமாளைக் கண்ணுற்று, புணர்த்தகையினராய் - வணக்கத்தோடு கைகளைக் கூப்பினவராய், அடியேனுக்கும் - உங்களுக்கு அடிமையான எனக்கும் கூட, போற்றுமினே - பிணங்கிய நாயகனை பெருமானுக்கு ஸ்துதிவார்த்தை சொல்லவேண்டும்.

குறிப்பு:—ஊடல் உவகை ஆகிய இரண்டும் நேர்ந்து நடாத்திய தம்பதிகளாகையால் எனக்காகப் பதில் நின்று என் நாயகனுடைய ஊடலைத் தீர்க்க நல்வார்த்தை ஒன்று இரண்டு சொல்லுங்கோள்.

யாப்பிலக்கணம்

[751-வது பக்கத் தொடர்ச்சி]

வகையுளியும், வனப்பும்

செய்யுளில் தனித்தனி சொல்லை நோக்காது சீரையே நோக்கிச்சொற்கள் வண்ண அறுப்புக்குஏற்றபடி அமைக்கப்படும். அங்ஙனம் அமைத்தலை வகையுளி என வழங்குவர் இயல் நூலார்.

வரலாறு

கடியார்பூங் கோதை கடாயினான் திண்டேர்
சிறியார்தம் சிற்றில் சிதைத்து.

இதில் சொல்லமைதிக் கேற்பக் கடியார் + பூங்கோதை—கடாயினான்' எனச் சீர்களை அமைத்து அலகிடுவோமானால், முதலிரண்டு சீர்களின் இயைபு நேரொன்றாசிரியத்தளையும், பின்னிரண்டு சீர்களின் இயைபு கலித்தளையும் ஆகி, குறள் வெண்பாவுக் குரிய இலக்கணஞ் சிதைந்துவிடும். ஆகையால், 'கடியார் பூங்+கோதை+கடாயினான்' எனச் சீர்களை யமைத்து அலகிடின், முன்னது வெண்சீர் வெண்டளையும், பின்னது இயற்சீர் வெண்டளையு மாகி, வெண்பாவுக் குரிய செப்பலோசையிற் சிதையாது நிற்றல் காண்க.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இக் குறள்வெண்பாவின் இரண்டாம்அடியிலமைந்துள்ள 'நீடுவாழ்+வார்' என்னும் இரு சீர்களையும் சீர் நோக்காது, சொல்லையே நோக்கி 'நீடு வாழ்வார்' என அமைப்பின், மாமுன்நேர் அமைந்து நேரொன்றாசிரியத்தளை யாகி வெண்பாவுக்குரிய இலக்கணம் கெடும். ஈற்றுச் சீரை 'வாழ்வார்' என அமைப்பின், வெண்பாவின் இறுதி நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றற்கியைந்த சீரைப் பெறுதல் வேண்டும் என்னும் யாப்பு நியதி கெட்டுவிடும். ஆதலின், 'நீடுவாழ்+வார்' என வகையுளி செய்தலாயிற்று என அறிக.

இனி வனப்பென்பது எழுத்தானுஞ் சொல்லானும் ஒரு செய்யுளுக்கு அமையும் அழகாம். அதனை இலக்கண அறிஞர் அம்மை, அழகு, தோன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எண் வகைப்படுத்து நுண்மையின் வழங்குவர்.

இவற்றுள் 'அம்மை' என்பது மென்மை வாய்ந்த சில சொற்களால், சிறந்த பொருளமையச் சில அடிகளால் அமைவது.

உ-ம்:—

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

இத்திருக்குறளில் மேற்கூறிய இலக்கணங்கள் அமைந்திருத்தலை நோக்குக.

'அழகு' என்பது செய்யுளுக்குரிய சொற்களாகிய திரிசொற்களால் இனிய ஓசை அமையச் செய்யப்படுவது. 'திரிசொல்' என்பன கற்றார்க்கன்றி மற்றையோர்க்கு அரிதுணர் பொருளனவாகத் தோன்றும் சொற்களாம்.

வரலாறு

துணியிரும் பௌவம் குறைப வாங்கி
அணிகிளர் அடுக்கல் முற்றிய எழிலி
காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
நெடுவரை மருங்கில் பாம்பென இழிதரும்
கடுவரல் கலுழி நீந்தி
வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே.

குறிப்பு:—பௌவம் - கடல், அடுக்கல் - மலை, எழிலி - மேகம், கால் - காற்று, மயங்கிய - கூடிய, ஓங்கல் - உயர்ச்சி, வெற்ப - மலைநாட்டுத் தலைவனே, நெடுவரை - உயர்ந்த மலை, மருங்கு-பக்கம், கடுவரல்-மிகுந்த வேகம், கலுழி - கான் யாறு, வல்லியம்-புலி, அதர் - வழி.

இந் நேரிசையாசிரியப்பாவில் மேற்கூறிய இலக்கணங்கள் இனிது அமைந்திருத்தல் காண்க.

'தோன்மை' என்பது பழைய செய்திகளைச் சொல்லுவது. இராமாணயம், பாரதம், கந்த புராணம் முதலியவற்றை இவ் வனப்புக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'தோல்' என்பது இரு வகைப்படும்: அவை மென்மைவாய்ந்த சொற்களால் பொருள் சிறக்கப் பாடப்படுவனவும், எல்லா வகையான சொற்களாலும் பல அடிகளாற் பாடப்படுவனவு மாகும்.

வரலாறு

(1) பாயிருள் பரப்பகம் குறையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலும் சேக்கைத்
துனிதரு வெள்ளம் துயில்புடை பெயர்க்கும்
ஒளிபோன் காஞ்சி எளிதெனக் கூறின்
இம்மை இல்லை மறுமை இல்லை
நன்மை இல்லை தீமை இல்லை
செய்வோர் இல்லை; செய்பொருள் இல்லை;
அறிவோர் யாரஃ திறவுழி இறகென.

இது மென்மைவாய்ந்த சொற்களால் பற்றற்றநிலையாகிய சிறந்த பொருளமையப் பாடப்பட்டது.

(2) பண்டைக் காலத் தண்டமிழ்ப்புலவர் பாடிய பத்துப் பாட்டில் 'மலைபடு கடாம்' போல்வனவற்றை இப்பகுதிக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'விருந்து' என்பது புதுவன புனைந்து பாடப்படுவதாம். அந்தாதி கலம்பகம் முதலிய நூல்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'இயைபு' என்பது ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்யெழுத்தும் ஈறாக அமையப் பாடப்படுவதாம்.

'புலன்' என்பது இயற்சொல்லால் பொருள் இனிது விளங்கப் பாடப்படுவதாம். இயற்சொல்லாவன அனைவர்க்கும் பொருள் விளங்கத்தகுந்த சோறு, கூழ், பால், குழம்பு, நீர், நிலம் முதலியன போன்ற சொற்களாம்.

வரலாறு

நண்பருற வினர்கள்நமை நாடியுற வாடல்
நறுநெயுறு குடத்தெறும்புநண்ணலென எண்ணுப்
பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே
பெருங்கபடம் இடுகலனே பிறங்குமவர் உடலம்.

இக் குறள்வெண்செந்துறை போல்வனவற்றைப் புலன்' என்னும் வனப்புக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'இழைபு' என்பது வல்லினமெய் யமையாது பாடப்படுவதாகும்.

வரலாறு

4. போந்து போந்து சார்ந்து சார்ந்து
5. தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
6. வண்டு சூழ விண்டு வீங்கி
7. நீர்வாய் கொண்டு நீண்ட நீல
8. மூர்வா யூதை வீச வூர்வாய்
9. மதியேர் வண்டோ டோல்கி மாலை
10. நன்மணங் கமழும் பன்னெல் லூர!
11. அமையேர் மென்றோ ளாயரி நெடுங்க
12. ணிணையீ ரோதி யேந்திள வனமுலை
13. யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி
14. னறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந் தல்கு
15. லணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
16. மணிமருள் வளர்குழல் வளரிளம் பிறைநுத
17. லொளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளொடு
18. நளிமுழவு முழங்கிய வணிநிலவு மணிநக
19. ரிருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
20. கலனளவு கலனளவு கலனளவு கலனளவு

பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்ப வொழிகுவ தன்றே."

இந்நேரிசையாசிரிப்பாவில் வல்லின மெய் ஒன்றேனும் பொருந்தியில்லாமை காண்க. இங்ஙனம் அமையும் இழைபு எனும் வனப்புடைச்செய்யுளில் செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடி வகுத்தவாறு அடிகளை எழுத்தெண்ணி அமைத்தல் வேண்டும் என்பர். அங்ஙனம் எழுத்தெண்ணுங்கால் குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தம், மெய் ஆகிய இவற்றை நீக்குதல் வேண்டு மென்பர்.

அங்ஙனம்நீக்கி எண்ணும்போது அடிதோறும்நாற்சீரின்மிகுந்துவருதல் கூடாதென்பர். அவ்வாறு நாற்சீரா னடைபெறுமடியில் நான்கெழுத்தேனும் ஐந்தெழுத்தேனும் ஆறெழுத்தேனும் பெற்றுவரும் மூன்றடியும் குறளடியாம்; ஏழெழுத்தேனும், எட்டெழுத்தேனும், ஒன்பதெழுத்தேனும் பெற்று வரும் மூன்றடியும் சிந்தடியாம்; பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு எழுத்துகளைப் பெற்று வரும் ஐந்தடியும் அளவடி யாம்; பதினைந்து, பதினாறு, பதினேழு எழுத்துக்களைப் பெற்று வரும் மூன்று அடியும் நெடிலடியாம்; பதினெட்டு, பத்தொன்பது, இருபது எழுத்துகளைப் பெற்று வரும் மூன்றடியும் கழிநெடிலடியாம். இருபது எழுத்தின் மிகுந்து வரும் நாற்சீரடி இல்லையென்பர்.

இவ் விலக்கணத்தின்படி நோக்க இவ்வுதாரணச் செய்யுளில் உள்ள முதல் மூன்றடிகளும் (4, 5, 6 எழுத்துகளை உடையவை) குறளடிகளாம்; அடிகளின் தொடக்கத்திலுள்ள எண்களைக் கவனித்தறிந்து, மற்ற அடிகளையு முணர்க.

கலித்தொகை

[748-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 31

இளவேனிற் காலத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் அக்கால வரவிலும் வரவில்லை. அதனால் தலைவி பெரிதும் வருந்தினள். அதனைக் கண்ட தோழி முதலில் வேனிலைநோக்கி அதன் செயலைக் கூறி, பின்னர்த் தலைவியை நோக்கி, "நங்காய், நம் காதலர் வருவர் எனக் கூறவந்த தூது இது" எனக்கூறி அவள்துயரை ஆற்றியதைக் கூறுவது இச் செய்யுள்.

எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற வைம்பால்
மையற விளங்கிய துவர்மண லதுவது [போன்
வைதாக நெறித்தன்ன வறலவிர் நீளம்பா
லணிநகை யிடையிட்ட வீகையங் கண்ணிபோற்
பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்

துணிநீராற் றூமதி நாளா லணிபெற
வீன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடு
மான்றவ ரடக்கம்போ லலர்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடு
நல்லவர் நுடக்கம்போ னயம்வந்த கொம்பொடு
முணர்ந்தவ ரீகைபோ லிணரூழ்த்த மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போற் புரிவுற்ற கொடியொடு
நயந்தார்க்கோர் நல்லைம னிளவேனி லெம்போலப்

பசந்தவர் பைதனோப் பகையெனத் தணித்துநம்
மின்னுயிர் செய்யு மருந்தாகிப் பின்னிய
காதல ரெயிறேய்க்குந் தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளுங் கமழ்குரற் கென்னுந்
தூது வந்தன்றே தோழி
துயரறு கிளவியோ டயர்ந்தீகம் விருந்தே.

(தரவு)

(வரி. 1 - 5) எஃகு இடை தொட்ட - கத்தரிக்கோல் நடுவிலே தீண்டிய, கார் கவின்பெற்ற - மேகத்தின் அழகைப்பெற்ற, ஐம்பால்போல் - கூந்தலைப்போல, மையற- மழை நீங்கிய காரணத்தால், துவர்மணல் விளங்கிய - உலர்ந்த மணல்கள் விளங்கின; அதுஅது - அம்மணல்களின் மீது, ஐதாக நெறித்தன்ன - அழகாகப் பிடித்துவிட்டாற்போன்ற, அறல் அவிர் நீள் ஐம்பால் - நெறிப்பு விளங்கின நீண்ட கூந்தலின், அணி நகை இடை இட்ட- அழகிய நகைகளுக்கு இடையே பொருந்திய, ஈகை அம் கண்ணிபோல் - பொன்னால் செய்த அழகிய தலைமாலை போல, பிணி நெகிழ் அலர் - கட்டுவிட்ட பல மலர்களுக்கிடையே, வேங்கை விரிந்த பூ நெறிகொள - வேங்கை மரத்தினது மலர்ந்த பூக்கள் வரிசைகொள்ளவும்,

அது அது என்னும் அடுக்குப் பன்மையை உணர்த்திற்று. மணற்பரப்புக்குப் பெண்கள்கூந்தலும், பல நிறப் பூக்களைக் கொண்ட மணல்களின் நடுவிலே வேங்கை மரத்தினது மலர்ந்த பூக்கள் வரிசை கொண்டமைக்குக் கூந்தலிலே பலஅணிகளுக்கிடையே பொருந்திய பொன்னாலாகிய தலைமாலையும் உவமை.

(வரி. 6 - 18) துணி நீரால் - தெளிந்த நீராலும், தூ மதி நாளால்-தூயசந்திரனையுடைய நாட்களாலும், அணி பெற ஈன்றவள் - அழகு பெறக் குழந்தையைப் பெற்றவளுடைய, திதலைபோல் - திதலையைப்போல, ஈர்பெய்யும் தளிரொடும் - ஈர்க்கையுடைய தளிர்களாலும், ஆன்றவர் அடக்கம்போல் - அறிவுள்ளார் (தம் காரியத்தை முடித்தற்குத் தக்க காலம் வருமளவும்) அடங்கி இருப்பது போல; அலர் செல்லா - (காலம் வருமளவும்) மலர்தலைச் செய்யாத, சினையொடும் - அரும்புகளையுடைய கொம்புகளாலும், வல்லவர் யாழ்போல-வாசிக்கத்தெரிந்தவர் யாழ் வாசிக்கும் பொழுது உண்டாகும் யாழிசையைப்போல, வண்டு ஆர்க்கும் புதலொடும் வண்டுகள் ஒலிக்கின்ற புதர்களாலும், நல்லவர் நுடக்கம்போல் - பெண்களுடைய கூத்துக் காண்பவர்களுக்கு இன்பத்தைச் செய்வதைப் போல, நயம்வந்த கொம்பொடும் - விருப்பம் வருதற்குக் காரணமான கொம்புகளாலும், உணர்ந்தவர் ஈகைபோல் -பொருள்களின் நிலையாமையை யுணர்ந்த பெரியோர்களின் தருமத்தைப்போல, இணர் ஊழ்த்த மரத்தொடும் - கொத்துக்கள் மலர்ந்த (எல்லார்க்கும் பயன்படும்) மரங்களாலும், புணர்ந்தவர் முயக்கம் போல் - அன்பால் கூடினவர்களுடைய ஆலிங்கனத்தைப்போல, புரிவு உற்ற கொடியொடும் - பின்னுதல் பொருந்திய கொடிகளாலும் (பொழில்கள் அழகுபெற), இளவேனில் - (வந்த) இளவேனிலே, எம்போல-(எம் தலைவர் எப்போது வருவரோ என்று விரும்பியிருக்கும்) எம்மைப்போல, நயந்தார்க்கு - (நீ எப்போது வருவாயோ என்று) விரும்பிஇருந்தவர்க்கு, ஓர் நல்லைமன்-நீ ஒரு நல்லையோ?

திதலை—மகவைப் பெற்றெடுத்தவளுடைய அடிவயிற்றில் ஈர்க்குப்போலக் காணப்படும் பல கோடுகளின் தொகை. 'தளிர்ப்புறத்து ஈர்க்கின் அரும்பிய திதலையர்' என்பது மதுரைக் காஞ்சி (707-708)

'இளையோய், கிளையைமன் எங்கேள் வெய்யோற்கு (புறம் 144) என்ற விடத்துப் போல, 'மன்' விழைப்பொருளில் வந்தது. 'இது' வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித், திரிந்து வேறுபடினுந் தெரிந்தவர் கொளலே' (தொ. இடை. 47) என்பதனாற் பெறப்பட்டது.

சுரிதகம்

(வரி. 14-19) பசந்தவர் - பசலைபூத்தவருடைய, பைதல் நோய்-வருத்தத்தைச் செய்யும் காமநோயை, பகைஎன தணித்து - தனக்குப் பகையாகக்கொண்டு போக்கி, நம் இன்னுயர் செய்யும் மருந்தாகி- நம்முடைய இனிய உயிரை உண்டாக்கும் மருந்துமாய், எயிறு ஏய்க்கும் - (மகளிர்) பற்களைப்போன்ற, தண் அருவி நறு முல்லை போது - குளிர்ச்சியைக்கொண்ட அருவியினது பக்கத்திலுள்ள மணம்பொருந்திய முல்லை அரும்புகளை, கமழ் குரற்கு ஆர கொள்ளும் என்னும் - இயற்கை மணம் வீசுகின்ற (உங்கள்) கூந்தலுக்கு நிரம்பக் கொள்ளுங்கள் என்னும், துயர் அறு கிளவியோடு - (நாம்) துன்பம் நீங்குவதற்குக் காரணமான சொல்லோடு, பின்னிய காதலர் தூது வந்தன்று - நம்மிடத்துத் தொடுத்த அன்புடைய காதலரது தூதாய் (இவ்விளவேனில்) வந்தது, தோழி - தோழியே, விருந்து அயர்ந்தீகம். (நாம் இதற்கு) விருந்து செய்வோம்!

அயர்ந்தீகம் - வினைத்திரிசொல்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 5. களம் 1.

[752-வது பக்கத் தொடர்ச்சி]

[குகையின் வாயில் திறக்கின்றது. பர்டினண்டும் மிராண்டாவும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கின்றனர்]

மிராண்டா:—இனிய வென் தலைவ, என்னை நீ பொய்யாட்டம் காண்கின்றாய் (1).

பர்டினண்ட்:—அல்லேன், எனதருமைக்காதலி, இவ்வுலகமே வாய்க்குமெனினும் அது செய்யேன் (2).

மிராண்டா:—ஆம், அரசுகள் ஓர் இருபதிற்கு நீ வழக்கிடுதல்வேண்டும்; நானும் அதனைச் செவ்விய ஆட்டமென்றே செப்புவேன் (3).

அலான்ஸோ:—இதுவும் இத்தீவின் மாயத்தோற்றமேயாகித் தீருமாயின், அருமைப்புதல்வன் ஒருவனை யான் இருமுறை இழந்தவனாவேன் (4).

ஸபஸ்ட்டியன்:—மிகப் பெரிய விந்தை இது!

பர்டினண்ட்:—கடல்கள் வெருவரச் செய்தனவேனும், அவைதாம் இரக்கமுடையன. காரணமின்றியே அவைகளைச் சபித்தேன் நான். (5)

[அலான்ஸோவின்முன் முழங்காற் படியிட்டு வணங்குகின்றான்]

அலான்ஸோ:—மகிழ்வுடைய வோர் தந்தையின் வாழ்த்தெல்லாம் இப்பொழுது நின்னை எம்மருங்குஞ் சூழ்ந்திடுக (6). எழுந்திரு, இவ்வயின் எங்ஙனம் வந்தனை இயம்புவாய்.

மிராண்டா:—ஓ, அதிசயமே! நல்ல நல்ல பிராணிகள் எத்தனை எத்தனை இங்குஇருக்கின்றன! எத்துணை அழகிது மனித இனம்! இத்தகைச் சனங்களை வைத்திருக்கும், ஓ, சீரிய புதிய புவனமே! (7).

ப்ராஸ்ப்பீரோ:—உனக்கே புதியது இது. (8)

அலான்ஸோ:—நீ விளையாடிக்கொண்டிருந்த கன்னியிவள் யாவள்? நின் உறவு மூன்று மணியளவிற்கு மேல் மூத்திருத்தலியலாது (9) நம்மைப் பிரித்துப் பிறகு ஒருங்குசேர்த்த தெய்வம் இவள் தானோ?

பர்டினண்ட்:—ஐய, இவள் மாநுடமகளே, எனினும், ஈறிலாத தெய்வத்தால் என்னுடையவள் ஆகின்றாள். என் தந்தையை யான் உசாவுதற் கியலாத காலத்தில் நானிவளைத்தேர்ந்து கொண்டெனென்; மற்று, எனக்குஅன்னவன் ஒருவன்உண்டென்றும் யான்எண்ணவில்லை(10). புகழுடையஇம்மிலானின் தலைவனுக்கு மகள் இவள்; இவனது கீர்த்தியைப் பற்றி யான் பன்முறை கேட்டுளே னயினும், இதுகாறும் கண்டதில்லை. அவனின்றுயான் இரண்டாமுயிர் பெற்றுளேன். இந்தப் பெருமகள் அவனை எனக்கு இரண்டாந் தந்தை ஆக்குகின்றாள். (11).

அலான்ஸோ:—நானும் அவளுக்கு ஆகின்றேன் (12). மற்று, ஹோ, என் மகவின்பால் நான் மன்னிப்புக்கேட்கவேண்டுமென்பது எத்துணை விபரீதமாக ஒலிக்கின்றது! (13)

ப்ராஸ்ப்பீரோவின் குகையின் வாயில் திறக்க, உள்ளே, பர்டினண்டும் மிராண்டாவும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருப்பதை அலான்ஸோ முதலானவர் காண்கின்றனர்.

(1) பொய்யாக ஆடி நீ என்னை இப்பொழுது வஞ்சிக்கப்புகுகின்றாய்—என்பது பொருள்.

(2) உன்னை வஞ்சிப்பதால் இவ்வுலகமே எனக்குக் கிடைக்குமென் றிருந்தாலும், அதற்கு ஆசைப்பட்டு உன்னை வஞ்சிக்கவோ நான் ஒருபோதும் இசையமாட்டேன்- என்பது பொருள்.

(3) உலகமே பணையமானால்தான் அதனைக்கைக்கொள்வதற்குப் பொய்யாட்டாம் ஆடவேண்டு மென்பதில்லை. இருபது இராச்சியங்கள் கிடைப்பதா யிருந்தாலும் போதும்; அதன்பொருட்டு நீ பொய்யாட்டம் ஆடி அதுவே நேரியதென்று வழக்கிடுவாயானாலும், உனக்கு வரும் அந்த இலாபத்தை மகிழ்ந்து நான், நீ ஆடிய ஆட்டம், செவ்விய ஆட்டமென்றே சம்மதித்துவிடுவேன்—என்பது பொருள். உன்னுடைய நன்மையையே என்றும் கருத்துறமகிழ்கின்ற நான், நின் ஆட்டத்தில் கலக்கின்ற பொய்யைப் பொருள் படுத்தமாட்டேன்—என்பது கருத்து.

(4) பர்டினண்டைக் கண்ணுற்ற ஆலான்ஸோ, இதுவும் அத்தீவிற்கு இயற்கையாகிய மாயத்தோற்றங்களில் ஒன்றென்று மருண்டு, "ஒருமுறை இழந்த என் மகனை நான் பெற்றேன்போல் காட்டி, மீண்டும் அவன் மறைவானால், இரண்டா முறையும் இழந்த என் துயரம் பின்னும் பெரியதாகும்—என்பது பொருள்.

(5) என் தந்தை முதலியவர்களை விழுங்கியதுபோல் காட்டி என்னைப் பயமுறுத்தியதேனும், கடலானது உண்மையில் இரக்கமுடையதாகித் தீதொன்றும் செய்ததில்லை. ஆதலின் நான் முன் கடலைச் சபித்தது அடுக்காது—என்பது பொருள்.

(6) நின்னைக் கண்ட மகிழ்ச்சியுடன் உன் தந்தையாகிய நான், இப்பொழுது உனக்கு எல்லா நன்மையும் உண்டாகும்படி வாழ்த்துகின்றேன்—என்பது பொருள்.

(7) இத்தனை மனிதரை ஒருங்கே கண்ட மடவாள் மிராண்டா வியப்பு மேலிட்டு விளம்பும் இது அழகின தருமை மிகவும் வாய்ந்தது. கபடற்ற அவள் இயற்கைக்கு ஏற்றது.

(8) உனக்கே புதியது, என்னுங்கால், உலகத்தின் தீமைகளைக்கண்டு அறிந்திருக்கின்ற ப்ராஸ்ப்பீரோ தன் மனச்சலிப்பைத் தெரிவிக்கின்றான். மனிதரோடு பழகியிராத மிராண்டா, "சீரிய புதிய புவனம்" என்பதும், அதற்குப் ப்ராஸ்ப்பீரோ, "நினக்கே புதியது" என்று எதிர் உரைப்பதும், அநுபவநிலையில் இவ்விருவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நன்றாக எடுத்துக் காட்டுகின்றன.

(9) இத்தீவிற்கு நாம் வந்து மூன்றுமணி நேரமே யாகின்றதாகையால்: அவளுடன் நீ உறவுகொண்ட காலமும் அம் மூன்றுமணி நேரத்திற்குள்ளே யாகி அமைதல்வேண்டும்—என்பது பொருள்.

(10) உசாவுதல்=கலந்து ஆலோசித்து அநுமதி கேட்டுக்கொள்ளல். "நீ உயிர் துறந்தனை என்று நான் எண்ணியிருந்தேனாதலின் உன் அனுமதி பெறாமலே இவளை மணங்கொள்ள நிச்சயம் செய்தேன்—என்பது பொருள்.

(11) ஒருவன் அல்லது ஒருத்தி தன் மாமனாரைத் தன் 'தந்தை' என்றே அழைப்பது மேனாட்டு வழக்கு. மிராண்டா பர்டினண்டை மணப்பதால் ப்ராஸ்ப்பீரோவை அவனுக்குத் தந்தை யாக்குகின்றாள். ஆதலின், பெற்ற தந்தை முதல் தந்தையும், மாமனார் இரண்டாந் தந்தையும் ஆகின்றார்.

(12) நானும் அவ்வாறே இவளுக்கு இரண்டாம் தந்தை ஆகின்றேன், என்பதால், பர்டினண்ட் அவளை மணப்பதற்கு அலான்ஸோ தன் சம்மதத்தைத் தெரிவிக்கின்றான்.

(13) தன்மகவு = மிராண்டா. இப்பொழுது என் மகவாகின்ற இவளிடத்திலிருந்து, நான், அவளுக்கும் அவள்

ப்ராஸ்ப்பீரோ:—இதனுடன், ஐய, நிறுத்து. கழிந்து விட்ட வோர் பாரத்தால் நாம் நம் நினைவினைச் சுமத்த வேண்டா. (14).

கன்ஸாலோ:—உள்ளுற யான் கண்ணீர் வடித்திருந்தேன்; இல்லையேல் இதற்கு முன்னரே நான் பேசியிருத்தல் வேண்டும் (15)—கீழ்நோக்கி, ஓ தெய்வங்காள், இவ்விருவர் மீது ஓர் திப்பிய கிரீடத்தை இறக்குங்கள்! ஏனெனில், எங்களை இங்குக் கொணர்ந்த வழியினைக் குறித்துவிட்டவர் நீங்களே(16).

அலான்ஸோ:—'ஆம்' என்கின்றேன், கன்ஸாலோ!

கன்ஸாலோ:—அவன் சந்ததி நேப்ல்ஸிற்குச் சக்ரவர்த்தி ஆகவேண்டுமென்றே, மிலான் மிலானிலிருந்து துரத்தப்பட்டான் (17)? ஓ, பொதுவாய உவகையைக் கடந்தவோர் உவகைகூர்மின்(18)! அழியாத தூண்களில் இதனைப் பொன்னினால் பொறித்து வைமின் (19)! ஓரேபிரயாணத்தில், க்ளாரிபல் தன் நாயகனை ட்யூனிஸ்ஸில் கண்டு பெற்றனள்; அவள் உடன்பிறந்தோன் பர்டினண்ட், தன்னையே இழந்துவிட்ட வோர் இடத்தில் ஒரு மனைவியைக் கண்டு பெற்றனன்; ஓர் ஏழைத்தீவில் ப்ராஸ்ப்பீரோ தன் அரசினைப் பெற்றான்; நாங்கள் எல்லோரும், ஒருவனேனும் தனக்குத் தானேயா யில்லாதபோது, எங்களையே கண்டு பெற்றோம்.(20)

அலான்ஸோ:—[பர்டினண்டிற்கும் மிராண்டாவிற்கும் ஒருபுறமாய்] உந்தம் கைகளைக் கொடுங்கள்; உங்களுக்கு ஓகைவிரும்பாதவன் இதயத்தைத் துன்பமும் துயரமும் என்றும் சூழ்ந்திடுக (21).

கன்ஸாலோ:—ஆம்! அவ்வாறே யாகுக.

தந்தைக்கும் செய்த கொடுமைகளுக்காக மன்னிப்புக் கேட்க நேரிடுகின்றதே, இது என்ன விபரிதம்—என்பது பொருள்.

(14) கடந்தவைகளை நினைத்து இப்பொழுது ஒருவரும் கழிவிரக்கத்தால் வருந்தவேண்டா; ஆகையால் இனி அதைப்பற்றி ஒன்றும் பேசாதே—என்பது பொருள்.

(15) ஆனந்தத்தால் நான் மனதிற்குள்ளே கண்ணீர் சொரிந்திருந்தேன், ஆகையாற்றான் இதுகாறும் பேசுதற்கு எனக்கு நாவெழவில்லை—என்பது பொருள்.

(16) தெய்வங்காள், இவ்விருவருக்கும் ஓர் புதல்வன் பிறந்து, அவன் முடிதரித்த மன்னனும்படி வரங்கொடுங்கள்; நீங்களே இவ்விருவரும் இங்குச் சந்திக்கும்வண்ணம் எங்களை இங்குக் கொண்டு சேர்த்தீர்—என்பது பொருள்.

(17) மிலான் மிலானிலிருந்து துரத்தப்பட்டான்—மிலானுக்குத் தலைவனானப்ராஸ்ப்பீரோ அம்மிலான்தேசத்திலிருந்து துரத்தப்பட்டான்.

(18) அசாதாரணமான வோர் களிப்பை நாம் இப்பொழுது கொள்ளவேண்டியவர்களா யிருக்கின்றோம்—என்பது பொருள்.

(19) இந்தச் செய்தியை நாம் கல் தூண்களில் பொன்னெழுத்துக்களால் எழுதிவைக்கவேண்டும் — என்பது பொருள்.

(20) நாங்கள் எல்லோரும்..........பெற்றோம் = புத்தி கலங்கிச் சுவாதீனம் அற்று இருந்த நாங்கள் எல்லோரும் இப்பொழுது மீண்டும் அமைதியும் அறிவும் அடைந்தோமாதலின், எங்களில் ஒவ்வொருவனும் இப்பொழுது தன்னைத் தானே தேடி அடைந்தவன்போல ஆயினான்—என்பது பொருள்.

(21) அலான்ஸோ, அவ்விருவர் கையையும் மணமுறையில் சேர்த்து வைக்கின்றான். "இதனைக் கண்டு சந்தோஷப்படாதவன் இங்கு யாராவது இருப்பானாயின், அவன் நீங்காத துன்பமும் துயரமும் உடையவனாகவே என்றும் தீரட்டும்", எனச் சபிக்கின்றான், அவனை யறியாமலே, இந்தச் சாபம், அன்டோனியோவையும் ஸபஸ்டியனையுஞ் சேரலாம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 9. அயோமுகிப் படலம்.

[755-வது பக்கத் தொடர்ச்சி]

அறத்தினை அயிர்ப்பதும் அயர்வின் செய்கையே.

கதிரவன் கடலுள்குளிக்கவும் இராமனும் இலக்குவனும் அவ்வயின்விட்டுநீங்கி ஓர்மலையிடைச் சென்று தங்கினார். அவ்வேளை,

மெய்யுறவுணர்வுசெல்லாவறிவினைவினையினூக்கும்
பொய்யுறுபிறவிபோலப்போக்கரும்பொங்குகங்குல்
நெய்யுறுநெருப்பின்வீங்கிநிமிர்தரவுயிர்ப்புநீளக்
கையறவுறுகின்றாராற்காணலாங்கரையிற்றன்றே.

[மெய்ம்மையைச் சார்ந்த உணர்வு கலவாத அறிவினைக் கருமத்தொடர்பில் செலுத்துகின்ற பொய்ப்பிறவிபோல முடிவின்றி வளர்ந்த அவ்விரவானது, நெய் சொரிந்த நெருப்பைப்போலப் பொங்கி எழும்படி பெருமூச்சு நீள, கையற்ற துயரமடைந்த அவர்களால் கரைகாணமுடியாததாயிற்று.]

அறிவிற்கும் உணர்விற்கும் இடையேயுள்ள வேற்றுமையும் தொடர்பையும் மறவாமல் காத்து மானுடமனத்திற்கு உறுதியளிப்பவர் கம்பர். மெய்யுணர்வு அழிதரும்படி அறிவு பெருகுவதன் தீமையைத் தெரியக்கண்டால் இக்காலம் உலகத்தின் கதி வேறு வழி செல்லலாகும். உணர்வினை அறிவின்பால் செலுத்தாமையே இப்பொய்யுறு பிறவியின் கோலம். எனின்,

யாமது தெரிதறேற்றா மின்னைகைச் சனகி யென்னுங்
காமரு திருவை நீத்தோ முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல்வீரன் கண்ணெனத் தெரிந்த செய்ய
தாமரைகங்குற்போதுங் குவியலாத்தன்மையென்னோ

[தேன்பொருந்திய மாலையை அணிந்த வீரனாகிய இராமனது கண்களென்று சொல்லப்படும் சிவந்த தாமரை மலர்கள் இரவுக்காலத்திலும் (நித்திரை கொண்டு) குவியாதிருந்ததற்குக் காரணம், இனிய நகைபுரியும் சீதையென்னும் அழகிய இலக்குமியைப் பிரிந்ததாலோ, அல்லது அவள் முகமாகிய சந்திரனைக் காணாததாலோ வேறு எதனாலோ, நாம் அதனை அறிதற்கு இயலவில்லை.]

என்னுங்கால்,ஒருகால் தான்கொண்டுள்ள பொய்யுறு பிறவியின் கோலங்களைச் சிந்தித்து இராமன் கண்படாதிருந்தானோ என்ற காரணத்தையும் இவ் வையங்களுள் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்.

அக் கங்குலினகவயின் திங்களும் எழுந்தது.இராகவன்,சீதாபிராட்டியின் தனிமையை நினைத்துஇரங்கலுற்றான்—

வாங்கும் வில்லன் வரும்வரு மென்றிரு
பாங்கு நீணெறி பார்தன ளோவெனும்
வீங்கும் வேலை விரிதிரை யாமென
வோங்கி வோங்கி யொடுங்கு முயிர்ப்பினன்.

[கடலில் பொங்குகின்ற விரிந்த அலைகள்போல ஓங்கி ஓங்கி அடங்குகின்ற பெருமூச்சுடையவனாகிய இராமன், "நான் வளைத்தவில்லினனாய் வருவேன் வருவேன் என்று சீதை என்னை எதிர்பார்த்து இருபக்கங்களிலும் நீண்ட வழியை நோக்கினளோ, என்று சிந்திப்பான்]

பூத்தகொம்பொன்று மதக்களிற்றினால் ஒடிபடுகின்றதென்ன, சீதை, கொடிய இராவணனால் பற்றுண்டபோது தான் சென்று காவாமையால் அவள் என்ன என்ன எண்ணினள்கொல் என்று பன்னிப்பன்னி நையுமிவ் வையன்—

நஞ்சு காலு நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயின் மதியென மட்குவாள்

வெஞ்சி னஞ்செ யரக்கர்தம் வெம்மையை
அஞ்சி னன்கொ லென்றையுறு மாலென்பான்

[விஷத்தைச் சொரியும் பற்களையுடைய பெரிய இராகுவென்னும் பாம்பின் வஞ்சனையுடைய வாயில் அகப்பட்ட சந்திரன்போல்ஒளிமழுங்கிய சீதை,கொடுங்கோபமுடைய அரக்கர்களுடைய கொடுமைக்கு நான் பயப்பட்டு வாராமல் இருந்தேனோவென்று சந்தேகப்பட்டாளோ—என்று நினைப்பான்]

வில்லை நோக்கி நகுமிக வீங்குதோட்
கல்லை நோக்கி நகுங்கடைக் கால்வருஞ்
சொல்லை நோக்கித் துணுக்கெனுந் தொன்மறை
எல்லை நோக்கினர் யாவரு நோக்குவான்

[பழைய வேதங்களின் எல்லையைக் கண்டவர்களால் கண்டறியப்படுபவனாகிய இராமன், தன் கை வில்லைப்பார்த்து இது பயனற்றுப்போயிற்றே என்று இகழ்ந்து சிரிப்பான், அவ்வாறே பருத்த தன் தோள்களாகிய மலைகளைப் பார்த்துச் சிரிப்பான். தன் குதிகாலைத் தொடர்ந்துவரும் பழியைநினைத்துத் திடுக்கிடுவான்]

ஈற்றடி இங்கு இன்றியமையாதது. எம்பெருமான் தன் மாயப்பொய்ப் பிறவிக்கேற்பன சில செய்யத்தான் வேண்டுமெனின் நினைக்கவும் வேண்டுமோ என்று ஐயுறுவார்க்கு, ஐயன் திருவுள்ளம் அது வென்பதல்லால் அமைதி வேறு இல்லை என இயம்பாமற் கம்பர் இங்கு இயம்புகின்றார்.

நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என்று ணைக்குல மங்கையொ ரேந்திழை
தன்று யர்க்குத் தகவிலெ னாயினேன்
நன்று நன்றென் வலியென நாணுமால்

[பலவித உயிர்களையும் பாதுகாப்பதற்கு அமைந்த நான், நிமிர்ந்த ஆபரணங்களை அணிந்த என் மனைவியாகியவோர் உயர்குல மங்கையின் துயரத்தைத் தடுக்கமாட்டாதவன் ஆயினேன். எனது வலிமை நன்று நன்று, என்று நாணுவான்]

மதிபந் தொலைபக் கதிரோன் வருமாறு கங்குல் கழிந்ததில்லை; உணங்கிய இராமன்,

நீண்ட மாலை மதியினை நித்தமு
மீண்டு மீண்டு மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாண்முகம் போதர
ஈண்டு சால விளங்கினை என்னுமால்

[நீள்கின்ற மாலைக்காலச் சந்திரனைப் பார்த்து, தினந்தோறும் இங்கு வந்துவந்து சீதையின் முகத்திற்கு ஒப்பாகமாட்டாமையால் நாணிய நீ, இன்று, பூண்களை அணிந்த அவளது ஒளிபொருந்திய முகம் நீங்கிப்போனதுபற்றி மிகவும் ஒளியுடன் விளங்குகின்றாய்—என்பான்]

நீணி லாவி னிசைநிறை தன்குலத்
தாணி யாய பழிவர வன்னது
நாணி நாடு கடந்தன னாங்கொலோ
சேணு லாந்தனித் தேரவ னென்னுமால்

[நீண்ட நிலவைப்போன்ற கீர்த்தி நிறைந்த தன் குலத்திற்கு ஆணிபோன்ற பழிவந்து ஊன்றியதால் அப்பழிக்கு நாணி, ஆகாயத்தில் செல்கின்ற ஒப்பற்ற தேரையுடைய சூரியன்,இந்நாட்டைவிட்டு ஓடிப்போயினானோ-என்பான்]

சுட்ட கங்கு னெடிதெனச் சோர்கின்றான்
முட்ட மைந்த நெடுமுடக் கோனொடு
கட்டி வாளரக் கன்கதி ரோனையும்
இட்ட னன்கொ லிருஞ்சிறை யென்னுமால்

[தன்னைச் சுட்ட அவ்விரவானது மிகவும் நீள்கின்றதென்று வருந்துகின்ற இராமன், கடிவாளத்தைக் கையிற்கொண்ட முடவனாகிய சாரதியாம் அருணனோடு சூரியனையும் கட்டிக் கொடிய அரக்கனாகிய இராவணன் பெரிய சிறையில் வைத்தானோ—என்று கருதுவான்.]

இன்னவாறு இராமன் எண்ணின பலப்பல. பொதுவறப் பொலியுமோர் சிந்தனை யாதும் இச் செய்யுள்களில் இல்லை. இன்னவைகளைப் பாடுவதற்குக் கம்பர் வேண்டா. காரிகை கற்கப்புகுகின்ற மாணவன் எவனும் போதும். இப்படிச் சுவையற்ற பாடல்கள் கம்பர் நூலில் பிரிதும் இல்லாமலில்லை. ஷேக்ஸ்ப்பியர் நூலிலும் எவ்வளவோ வுள. எனினும் இக்காரணத்தினால் அந்நூல்களின் பெருமை குறையுமென்று கொள்ளலாகாது. நூலாசிரியர் யாவருக்குமே பொதுவாயவோர் செய்தி இது. அதுவுமல்லாமல் இங்கு, இராமனது தளர்ச்சியைத்தான் கம்பர் கடன்கொண்டனரோ என்று எண்ணும்படி,

திறத்தி னாதன செய்தவத் தோருற
ஒறுத்து ஞாலத் துயிர்தமை யுண்டுழல்
மறத்தி னார்கள் வலிந்தனர் வாழ்வரேல்
அறத்தி னாலினி யாவதெ னென்னுமால்

[தவம் செய்வோர் துன்பங்களை அடையத் தம் வலிமையால் வருத்தி உலகத்தில் உள்ள உயிர்களைத் தின்று திரிகின்ற பாவியர்களாகிய அரக்கர்கள் இவ்வாறு வலியன செய்து வாழ்வாராயின், இதன்மேல் தருமத்தால் கிடைக்கும் பயன் யாதோ]

என்ன ஐயமுற்று வியக்கலானான். இவ் வரக்கர்தம் வாழ்வும் வரமும் வலியும் 'மசரத மனையதே' என்பதை யறிந்த எம்பெருமான், "ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்த பின்னர்"ச் சிந்தை திகைத்து, "அறத்தினால் இனி ஆவது என்" என ஐயுறுவானேல், அன்னவனைத் தொடர்ந்து பாடுகின்ற கவிதான் பிறது என் செய்வார். ஆதலாற்றான் அற்றம் பார்த்திருந்த அனங்கனும், இப்படியும் இயம்புவானோ இவன் என்னக் கலக்கம் எய்தினானெனப் பொருள்கொண்டாலன்றி,

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக „	0-12-0
பிருங்காமலக „	0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

B.V. ச்யாவனப்ராச — B.V. பிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

சந்தனம் பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) B.V. பி. மேடிகேடட் டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

B.V. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலா - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்

ஜ்வரேக் — எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

தேனின் றெய்வத் திருநெடு நாட்கிலைப்
பூநின் றெய்யும் பொருகணை வீரனும்
மேனின் றெய்ய விமலனை நோக்கினன்
தானுந் தேர்கில னுய்ந்தடு மாறவான்

[வண்டுகளால் ஆகிய தெய்வத்தன்மை பொருந்திய நீண்ட நாணியையுடைய வில்லிலிருந்து போர்செய்கின்ற அம்புகளாகப் பூக்களைக்கொண்டு எய்யும் மன்மதனும், தூயவனாகிய இராமன் மேல் எய்வதற்கு மேலிருந்து பார்த்தான்; பார்த்த ளவில், தானும் இராமன் நிலையை அறியமாட்டாமல் தடுமாறினன்]

என்னுஞ் செய்யுளிற்கு வேறு பொருள் காண்பது அரிதாகிவிடும்.

வர்த்தமானம்

செட்டிநாட்டுக்

கலா நிலயக் கல்விக்கழகம்

இக்கழகத்தின் அடுத்த வகுப்பு கானாடுகாத்தானில் பிப்ரவரி மாதம் 3-ம், 4-ம் தேதிகளிற் கூடும். (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை).

அவ்விரு தினங்களிலும் மாலை 6-மணிக்குக் காரைக்குடியில் S. M. S. ஹைஸ்கூல் கட்டிடத்தில் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர், B. A. B. L., கம்பராமாயணக் கட்டுரைகள் நிகழ்த்துவார்.

அமெரிக்கரின் வருத்தம்:—"அமெரிக்காவில் வளர்ந்துவரும்நாகரிகம்சப்தத்தையேவளர்த்துவருகின்றது. நியூயார்க், சிக்காக்கோ போன்ற பெரிய நகரங்களில் இரவு முழுதும் ஏற்படும் சப்தம் எவரையும் அமைதியாகத் தூங்கவிடுவதில்லை. சாஸ்த்திர ஆராய்ச்சிக்காரர்கள், வெளியிடத்தில் ஏற்படும் சப்தம் வீட்டிற்குள் புகாதிருப்பதற்குரிய முறைகளை விரைவிற்தேடவில்லையாயின் அமெரிக்காவில் இனிப் பிறக்கும் சந்ததியார்கள் 100-க்கு நூறு செவிடர்களாக நேரிடுமென்றும், இப்பொழுதே செவிடர்களின் தொகை பெருகி வருகின்றது என்று வருந்துகின்றார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அழாத ஹிட்லர்:—ஜெர்மனி தேசத்துச் சர்வாதிகாரியான ஹிட்லர் தமது ஆயுள் காலத்திலே இருமுறைதான் அழுதிருக்கின்றார். அவர் தாயார் இறந்தபோது ஒரு முறை அழுதாரம். அப்போது அவருக்கு வயது 17. யுத்தத்தில் விஷப் புகையால் அவர் கண் குருடானது. அவர் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தபோது யுத்தத்தில் சமாதான மேற்பட்டுவிட்டதாக அவருக்குச் சிலர் அறிவித்தார்கள். உடனே ஹிட்லர் கண்ணீர்விட்டு அழுதாரம். அன்றுதான் இவர் இனிமேல் தாம் ஒரு அரசியல் வாதியாக வேண்டுமெனத் தீர்மானித்தாராம்.

* * *

இரணசிகிச்சையில்புதுமுறை:—ஐரோப்பாவில் இப்பொழுது மின்சார சக்தியின் உதவிகொண்டு இரணசிகிச்சை செய்யப்படுகின்றதென்றும், இப்புது முறை ஆபரேஷன் செய்கையில் இரத்தம் வராமல் தடுக்கப்படுகின்றதென்றும் தெரிகின்றது.

* * *

புது வகைத் துணி:—இங்கிலாந்தில் ஒரு கம்பெனியார் ஒரு புதுவகைத்துணி செய்திருக்கின்றனராம். இத்துணியில் துப்பாக்கி குண்டு செல்வதில்லையாம். இனிமேல் இத்துணி இராணுவத்திற்கு உபயோகப்படும் என்று தெரிகின்றது.

* * *

மரத்தில் வீடு:—அமெரிக்காவிலுள்ள கொலரேடா என்னும் ஊர் வாசியான எல்பின் என்பவர், 39 அடி உயரமுள்ள ஒரு மரத்தில் ஓர் சிறிய வீட்டைக் கட்டிக்கொண்டு அதில் வசித்து வருகின்றாராம். வீடு சிறிதேயாயினும் அதனில் சகல வசதியும் உளதாம்.

* * *

ஓர் முயற்சி:—பிரிட்டனிலுள்ள கரம்பு நிலங்களையும் மலைச்சாரல்களையும் கால் நடைகளின் மேய்ச்சலுக்குரிய புல்தரையாகச் செய்யப்புரொபஸர் R. G. ஸ்டேபில்டன் என்பவர் கடந்த 20 வருஷங்களாக முயன்று ஒரு வழியைக் கண்டுபிடித்து விட்டாராம். இவரது ஆராய்ச்சிச் செலவிற்காக ஸர் ஜான் கான் என்பவர் 20 ஆயிரம் பவுன் அளித்தாராம். மேற்கூறிய புரொபஸர் 70 ஏக்கர் கரம்பு நிலங்களை நல்ல புல்தரையாகச் செய்துவிட்டார். இனி சுலபமான வழியில் அதிக பொருட் செலவும் இல்லாமல் கரம்பு நிலங்களை விவசாயத்திற்குரியதாக மாற்றலாம் என்று அவர் கூறுகின்றாராம்.

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இஹம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இஹம்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)